शिक्षा मंत्रालय
स्कूल शिक्षा और साक्षरता विभाग
MINISTRY OF EDUCATION
Department of School Education & Literacy

समग्र शिक्षा
Samagra Shiksha

# பள்ளி மேலாண்மைக் குழுக்களுக்கான (எஸ்.எம்.சி.கள்) வழிகாட்டுதல்கள்




பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை,
கல்வி அமைச்சகம், இந்திய அரசு
(மே 2026)

மே 2026
PD 0.5H BS

© தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழு, 2026

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுவின் செயலரால் பதிப்பகப் பிரிவில் வெளியிடப்பட்டு, ஸ்ரீ அரவிந்தர் மார்க், புது தில்லி – 110 016-இல் நரேன் பிரிண்டர்ஸ் அண்ட் பைண்டர்ஸ், டி-177-178, செக்டார்-63, நொய்டா (உ.பி.) 201301-இல் அச்சிடப்பட்டது.

शिक्षा मंत्रालय
स्कूल शिक्षा और साक्षरता विभाग
MINISTRY OF EDUCATION
Department of School Education & Literacy

समग्र शिक्षा
Samagra Shiksha

# பள்ளி மேலாண்மைக் குழுக்களுக்கான (எஸ்.எம்.சி.கள்) வழிகாட்டுதல்கள்

பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறை,
கல்வி அமைச்சகம், இந்திய அரசு
(மே 2026)

धर्मेन्द्र प्रधान
ଧର୍ମେନ୍ଦ୍ର ପ୍ରଧାନ
Dharmendra Pradhan

सत्यमेव जयते

शिक्षा मंत्री
भारत सरकार
Minister of Education
Government of India



# செய்தி

கல்வி அமைச்சகத்தின் பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையால், பள்ளி மேலாண்மைக் குழு (எஸ்.எம்.சி.) வழிகாட்டுதல்கள், 2026 வெளியிடப்படுகின்றன என்பதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வழிகாட்டுதல்கள், அனைவரையும் உள்ளடக்கிய கல்வியை ஊக்குவிக்கவும், பங்களிப்புடன் கூடிய பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தை வலுப்படுத்தவும், பள்ளிகள், பெற்றோர்கள், உள்ளாட்சி அமைப்புகள், பிற துறைகள் மற்றும் சமூகத்தினரிடையே ஒத்துழைப்பையும் ஒருங்கிணைப்பையும் வலுப்படுத்தவும் பள்ளி மேலாண்மைக் குழுவின் பணிகள் மற்றும் பொறுப்புகளைத் தெளிவாக வரையறுக்கின்றன.

கல்வியை அரசு, பள்ளிகள், பெற்றோர்கள் மற்றும் சமூகத்தின் கூட்டுப் பொறுப்பாக தேசிய கல்விக் கொள்கை (என்.இ.பி.) - 2020 அங்கீகரிக்கிறது. தேசிய கல்விக் கொள்கை-2020, மாணவர்களின் கற்றல், நலன் மற்றும் பள்ளியின் பொறுப்புணர்வை மேம்படுத்துவதற்கு, குறிப்பாகப் பின்தங்கிய மற்றும் குறைந்த பிரதிநிதித்துவம் கொண்ட பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகளின் நலன் சார்ந்து, பெற்றோர்கள் மற்றும் சமூகத்தின் அர்த்தமுள்ள பங்களிப்பு மிகவும் அவசியமாகும் என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. வலுவான மற்றும் திறம்படச் செயல்படும் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் (எஸ்.எம்.சி.), அனைவரையும் உள்ளடக்கிய கல்வியை, கூட்டு முயற்சியுடன் கூடிய, திறமையான கற்றல் சூழலை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

மாண்புமிகு பிரதமரின் ‘வளர்ந்த பாரதம் @2047’ தொலைநோக்குப் பார்வையில், கல்வி தேசக் கட்டமைப்பின் மையமாகவும், மக்கள் பங்களிப்பு நிர்வாகத்தின் அடித்தளமாகவும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வி கிடைத்து, சமூகம் தனது பள்ளிகளின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தீவிரமாகப் பங்கேற்கும் பொழுதுதான் வலுவான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் தற்சார்பு கொண்ட இந்தியாவைக் கட்டமைப்பது சாத்தியமாகும்.

இந்தச் சூழலில், பள்ளி மேலாண்மைக் குழுக்கள் (எஸ்.எம்.சி.) அடிமட்ட அளவில் பள்ளிக் கல்வியை வலுப்படுத்துவதில் மிக முக்கியப் பங்காற்றுகின்றன. பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களை ஒன்றிணைப்பதன் மூலம், பள்ளி மேலாண்மைக் குழுக்கள், கற்றல் விளைவுகளை மேம்படுத்தவும், பொறுப்புணர்வை உறுதி செய்யவும், சமத்துவத்தை ஊக்குவிக்கவும் பள்ளிகளுக்கு உதவுகின்றன. பள்ளித் திட்டமிடல் மற்றும் முடிவெடுப்பதில் அவர்களின் பங்களிப்பு, உள்ளூர் தேவைகளுக்கேற்பப் பள்ளிகள் சிறப்பாகச் செயல்பட உதவுகிறது; மேலும், சமூகத்தினரிடையே உரிமை மற்றும் நம்பிக்கையுணர்வை வலுப்படுத்துகிறது.

‘வளர்ந்த பாரதம் @2047’ நோக்கிய பயணம், திறன்மிக்க, தன்னம்பிக்கையுள்ள மற்றும் பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்குவதைச் சார்ந்துள்ளது. செயல்திறனுடனும் அதிகாரத்துடனும் விளங்கும் பள்ளி மேலாண்மைக் குழுக்களால் ஆதரிக்கப்படும் வலுவான பள்ளிகள், இந்தத் தேசிய இலக்கை அடைவதற்கு அடிப்படையாக அமைகின்றன. அடிமட்ட அளவில் பள்ளி நிர்வாகத்தை வலுப்படுத்துவதன் மூலம், நமது குழந்தைகளின் எதிர்காலத்திற்கும் இந்தியாவின் எதிர்காலத்திற்கும் ஒரு வலுவான அடித்தளத்தை நாம் அமைக்கிறோம்.

இவ்வழிகாட்டுதல்கள், நாடு முழுவதும் திறமையான பள்ளி நிர்வாகத்திற்கான ஒரு வலுவான மற்றும் தொலைநோக்குடன் கூடிய கட்டமைப்பை வழங்கும் என்றும், ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் முழுமையான கல்வியை உறுதி செய்வதில் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்கும் என்றும் நான் முழுமையாக நம்புகிறேன்.

தர்மேந்திர பிரதான்

**அனைவருக்கும் கல்வி, நல்ல கல்வி**

அறை எண் - 21107, முதல் தளம், மாண்புமிகு கல்வி அமைச்சர் அலுவலகம், நுழைவாயில் எண் 04,
கர்த்தவ்ய பவன்-2, புது தில்லி-110001
மின்னஞ்சல்: minister.sm@gov.in

जयन्त चौधरी
JAYANT CHAUDHARY

कौशल विकास और उद्यमशीलता
राज्य मंत्री (स्वतंत्र प्रभार) एवं
शिक्षा राज्य मंत्री
भारत सरकार
Minister of State (Independent Charge) for
Skill Development and Entrepreneurship
and Minister of State for Education
Government of India



# செய்தி

கல்வியே தேசிய வளர்ச்சியின் மையப்புள்ளி; சமூகப் பங்களிப்பே அதன் மிக வலிமையான உந்து சக்தி. அனைவரையும் உள்ளடக்கிய, எதிர்கால நோக்குடைய ஒரு தேசத்தைக் கட்டமைப்பதற்கு, நமது பள்ளிகள் சமூகங்களுடன் இணைந்திருப்பது அவசியமாகும். சமூகத்தின் செயல்மிகு ஆதரவு, பள்ளிகளை வலிமையானவையாகவும் உயிர்ப்புள்ளவையாகவும் மாற்றுகிறது.

தேசிய கல்விக் கொள்கை (என்.இ.பி) 2020, பள்ளிகளை உயிர்ப்புள்ள நிறுவனங்களாகக் கருதுகிறது. இங்கு பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் உள்ளூர் பங்குதாரர்கள் ஒன்றிணைந்து, ஒவ்வொரு குழந்தையின் முழுமையான வளர்ச்சி, மேம்பட்ட கற்றல் விளைவுகள் மற்றும் நல்வாழ்வை உறுதி செய்கின்றனர். இந்த தொலைநோக்குப் பார்வையின் மையமாகப் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் (எஸ்.எம்.சி.) விளங்குகின்றன. இவை சமூகப் பங்களிப்பு, பகிரப்பட்ட பொறுப்பு மற்றும் கூட்டுச் செயல்பாட்டிற்கான அடித்தளத்தை உருவாக்குகின்றன.

பள்ளி மேலாண்மைக் குழு வழிகாட்டுதல்கள்- 2026, இந்தக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துகின்றன. இந்த வழிகாட்டுதல்கள், பள்ளி மேலாண்மைக் குழுக்களை மேலும் செயல்திறன் மிக்கவையாகவும் அதிகாரம் கொண்டவையாகவும் மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. இதில், குழுக்களின் பங்களிப்புகள் மற்றும் பொறுப்புகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன; அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பாலின சமத்துவமிக்க பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், பள்ளி நிர்வாகத்திலும் மாணவர்களின் கற்றல் விளைவுகளிலும் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கும் வகையில், அவற்றின் திறன் மேம்பாட்டிற்குச் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சமூகங்கள் அது தங்கள் பள்ளியென்று உரிமையுடன் பொறுப்பேற்றுக்கொள்ளும்போது, அதன் முழுப் பயனையும் குழந்தைகள் அடைகிறார்கள். அதிகாரமளிக்கப்பட்ட பள்ளி மேலாண்மைக் குழுக்கள், கூட்டுப்பொறுப்பு மற்றும் நம்பிக்கைப் பண்பாட்டை ஊக்குவிக்கும். ஒவ்வொரு குழந்தையின் வெற்றிக்கும் நாம் காட்டும் இந்தப் பகிரப்பட்ட அர்ப்பணிப்பு, தேசிய கல்விக் கொள்கை 2020-இன் இலக்குகளை முன்னெடுத்துச் செல்லும். மேலும், அனைவருக்கும் தரமான, சமத்துவமான மற்றும் முழுமையான கல்வி கிடைப்பதற்கான வழியை இது உருவாக்கும்.

ஜெயந்த் சௌத்ரி

அறை எண் - 21042, முதல் தளம், மாண்புமிகு இணை அமைச்சர், நுழைவாயில் எண் 04, கர்த்தவ்ய பவன்-2, புது தில்லி-110001
மின்னஞ்சல்: mosedu-jc@gov.in

संजय कुमार, भा.प्र.से
सचिव

Sanjay Kumar, IAS
Secretary

सत्यमेव जयते

स्कूल शिक्षा और साक्षरता विभाग
शिक्षा मंत्रालय
भारत सरकार
Department of School Education & Literacy
Ministry of Education
Government of India



# செய்தி

கல்வி, குறிப்பாகப் பள்ளிக் கல்வி, ஒரு சமூக மற்றும் சமுதாயக் கருத்தாக்கமாகும். **தேசியக் கல்விக் கொள்கை (என்.இ.பி.) 2020**, கல்வியை ஒரு பகிரப்பட்ட சமூகப் பொறுப்பாகக் கருதுகிறது. இக்கொள்கை, பள்ளிக் கல்வியில் பரவலாக்கப்பட்ட ஆளுகை, சமூகத்தின் செயல்பாட்டுடன் கூடிய பங்கேற்பு மற்றும் பெற்றோரின் பங்களிப்பு ஆகியவற்றை குறிப்பாக வலியுறுத்துகிறது. பள்ளிகள் தங்கள் சமூகங்களுடன் நெருக்கமாக இணைந்திருக்கும்போதும், உள்ளூர்ப் பங்காளர்கள் ஒவ்வொரு குழந்தையின் மன வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் ஒன்றிணைந்து பங்களிக்கும்போதும் மட்டுமே, அப்பள்ளிகள் தங்கள் முழுத் திறனுடன் செயல்பட முடியும் என தேசியக் கல்விக் கொள்கை 2020 கருதுகிறது.

இந்தப் பின்னணியில், பள்ளி மேலாண்மைக் குழுக்கள் உள்ளூர் பள்ளி ஆளுகையை வலுப்படுத்துவதில் மிக முக்கியப் பங்காற்றுகின்றன. பள்ளி மட்டத்தில் ஒரு சமூக அமைப்பாக, பள்ளி மேலாண்மைக் குழுக்கள் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களை ஒன்றிணைத்துப் பள்ளிகளுக்கு ஆதரவளிப்பதற்கான ஒரு முக்கியமான தளத்தை வழங்குகின்றன. திறன்மிக்க பள்ளித் திட்டமிடல், வளங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்துதல், கற்றல் விளைவுகளை மேம்படுத்துதல் மற்றும் மாணவர்களின் ஒட்டுமொத்த நலனை உறுதி செய்தல் ஆகியவற்றிற்கு அவர்களின் செயல்பாட்டுடன் கூடிய பங்கேற்பு அவசியமாகிறது. வலுவான மற்றும் திறமையான பள்ளி மேலாண்மைக் குழுக்கள், பள்ளிகள் அனைவரையும் உள்ளடக்கியதாகவும், பொறுப்புணர்வுடனும், உள்ளூர் தேவைகளை உணர்ந்து செயல்படுவதாக இருப்பதையும் உறுதி செய்கின்றன.

பள்ளி மேலாண்மைக் குழுக்கள், ஒரு கூட்டுக்கற்றல் சூழலை மேம்படுத்துவதிலும், சமத்துவத்தை உறுதி செய்வதிலும், பெற்றோர்கள் மற்றும் சமூகத்தினரின், குறிப்பாக நலிந்த பிரிவினரின் குரல் பள்ளியின் முடிவெடுக்கும் செயல்முறைகளில் அர்த்தமுள்ள வகையில் பிரதிபலிப்பதிலும் முக்கியப் பங்காற்றுகின்றன. அத்துடன், இவை பள்ளி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்கின்றன.

**பள்ளி மேலாண்மைக் குழு வழிகாட்டுதல்கள்- 2026**, இதே தொலைநோக்குப் பார்வையை நடைமுறைப்படுத்துவதற்காகவும், திறமையான பள்ளி நிர்வாகத்திற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த வழிகாட்டுதல்கள், பொறுப்புகளைத் தெளிவுபடுத்துவதன் மூலம் அடிமட்ட அளவில் ஆளுகையை வலுப்படுத்தவும், பங்கேற்புடன் கூடிய பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தை ஊக்குவிக்கவும், பள்ளிகள், குடும்பங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பரந்த சமூகத்திற்கு இடையே ஒத்துழைப்பை மேம்படுத்தவும் வழிகாட்டுகின்றன. இந்த வழிகாட்டுதல்கள் அனைத்துப் பங்காளர்களின் கலந்தாலோசனைகள், ஒருங்கிணைந்த கல்வி (சமக்ர சிக்ஷா), முந்தைய அனைவருக்கும் கல்வி இயக்கம் (எஸ்.எஸ். ஏ.) மற்றும் தேசிய இடைநிலைக் கல்வி இயக்கம் (ஆர்.எம்.எஸ்.ஏ.) ஆகியவற்றின் வழிகாட்டுதல்கள் மற்றும் கையேடுகளைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. இது நடைமுறைக்கு வரும்போது, இதற்கு முன்னர் உள்ள அனைத்து வழிகாட்டுதல்களும் காலாவதியானதாகக் கருதப்படும்.

இந்தியா, **வளர்ந்த பாரதம் @2047-ஐ** நோக்கி முன்னேறி வரும் வேளையில், வலுவான சமூக அமைப்புகளின் பங்கு மேலும் முக்கியத்துவம் பெறுகிறது. செயல்பாட்டுடன் கூடிய மற்றும் வலுவான பள்ளி மேலாண்மைக் குழுக்களால் ஆதரிக்கப்படும் தரமான பள்ளிக் கல்வி, அறிவுள்ள, திறமையான மற்றும் பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்குவதில் முக்கியப் பங்காற்றும்.

இந்த வழிகாட்டுதல்கள், மாநிலங்களுக்கும் பள்ளிகளுக்கும் திறன்மிக்க மற்றும் பங்கேற்புடன் கூடிய பள்ளி மேலாண்மைக் குழுக்களை உருவாக்குவதில் வழிகாட்டும் என்றும், மாணவர்களின் கற்றல் விளைவுகள், நலன் மற்றும் வளர்ந்த பாரதத்தின் தொலைநோக்குப் பார்வைக்கும் அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கும் என்றும் நான் முழுமையாக நம்புகிறேன்.

சஞ்சய் குமார்

அறை எண் - 21102, முதல் தளம், செயலாளர் அலுவலகம், DoSEL, நுழைவாயில் எண் 04, கர்த்தவ்யா பவன்-2, புது தில்லி-110001
மின்னஞ்சல்: secy.sel@nic.in

# முன்னுரை

பள்ளிக் கல்வி என்பது சமத்துவமான,அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் முற்போக்கான சமூகத்தை உருவாக்குவதற்கான அடித்தளமாகும். பள்ளிகளின் தரம், கொள்கை வழிமுறைகள் மற்றும் கிடைக்கப்பெறும் வளங்களை மட்டும் சார்ந்திருப்பதில்லை; மாறாக, சமூகத்தின் செயலூக்கமான, தொடர்ச்சியான மற்றும் அர்த்தமுள்ள பங்கேற்புடனும் அது ஆழமாகப் பிணைந்துள்ளது. இச்சூழலில், கல்விச் சீர்திருத்தங்களில் பரவலாக்கப்பட்ட நிர்வாக அமைப்பு, சமூகப் பங்கேற்பு, குழந்தைகளின் கற்றல் மற்றும் முழுமையான நலனுக்கான பகிரப்பட்ட பொறுப்பு ஆகியவற்றுக்குத் தொடர்ச்சியாக முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த தொலைநோக்குப் பார்வையை அடிமட்டத்தில் செயல்படுத்துவதில், பள்ளி மேலாண்மைக் குழுக்கள் (எஸ்.எம்.சி.) ஒரு முதன்மையான மற்றும் வலிமையான நிறுவன அமைப்பாக முக்கியப் பங்காற்றுகின்றன.

தேசியக் கல்விக் கொள்கை (என்.இ.பி.) 2020, பள்ளிக் கல்வியில் பரவலாக்கப்பட்ட நிர்வாகத்திற்கும், பெற்றோர்கள், உள்ளூர் சமூகங்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் பிற பங்காளர்களின் செயலூக்கமான பங்கேற்பிற்கும் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கிறது. இக்கொள்கை, பள்ளிகளைத் தங்கள் சமூகங்களுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்ட, கற்றலின் துடிப்பான மையங்களாக அங்கீகரிக்கிறது. கற்றல் விளைவுகளை மேம்படுத்துதல், உள்ளடக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் பள்ளிகளின் ஒட்டுமொத்தச் செயல்பாட்டை வலுப்படுத்துதல் ஆகியவற்றிற்காகப் பகிரப்பட்ட பொறுப்பு, சமூக உரிமை மற்றும் பங்கேற்புடன் கூடிய முடிவெடுத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை என்.இ.பி. 2020 கோடிட்டுக் காட்டுகிறது. ஒருங்கிணைந்த கல்வி (சமக்ர சிக்ஷா அபியான்) திட்டத்தின் கீழும், இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான குழந்தைகளின் உரிமைச் சட்டம் (ஆர்.டி.இ), 2009-இலும் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் (எஸ். எம்.சி.) தொடர்பான வழிமுறைகள் இருந்தபோதிலும், தற்போதைய கல்விச் சூழலில் எஸ்.எம்.சி.களின் கட்டமைப்பு, செயல்பாட்டு முறை மற்றும் அவற்றின் முழுமையான ஆற்றலைத் தெளிவாக வரையறுக்க, ஒரு விரிவான, ஒருங்கிணைந்த மற்றும் புதுப்பிக்கப்பட்ட தேசியக் கட்டமைப்பின் தேவை உணரப்பட்டது. இச்சூழலில்தான், பள்ளி மேலாண்மைக் குழுக்களுக்கான இந்தத் தேசிய வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவை பள்ளிக் கல்வியின் அனைத்து நிலைகளுக்கும் பொருந்தக்கூடிய, எஸ்.எம்.சி.களை மையமாகக் கொண்ட ஒரு ஒருங்கிணைந்த தேசிய வழிகாட்டுதலாக அமைகின்றன.

இவ்வழிகாட்டுதல்கள், இவ்விஷயத்தில் இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட அனைத்து வழிகாட்டுதல்களுக்கும் மாற்றாக அமைகின்றன. மேலும், பள்ளி மேலாண்மைக் குழுக்களைப் (எஸ்.எம்.சி.) பங்கேற்பு நிர்வாகத்தின் வலிமையான மற்றும் செயலூக்கமான தளங்களாக வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இவ்வழிகாட்டுதல்களில் எஸ். எம்.சி.யின் கட்டமைப்பு, உருவாக்கம், பதவிக்காலம், தேர்தல் செயல்முறை, பணிகள் மற்றும் பொறுப்புகள், எஸ்.எம்.சி. உறுப்பினர்களின் திறன் மேம்பாடு மற்றும் பெருநிறுவன சமூகப் பொறுப்பு (சி.எஸ்.ஆர்.) ஒத்துழைப்பைப் பெறுவது தொடர்பான வழிமுறைகள் தெளிவாகக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. கல்விசார் மேற்பார்வை, பள்ளி மேம்பாட்டுத் திட்டம் (எஸ்.டி.பி.) வாயிலாகப் பள்ளித் திட்டமிடல், நிதி மேலாண்மை, சமூகத் தணிக்கை, குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் நலன், அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் சமத்துவமான கற்றலை ஊக்குவித்தல், மற்றும் முழுமையான அரசாங்க அணுகுமுறையின் (Whole-of-Government) கீழ் பல்வேறு துறைசார் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் ஆகியவை தொடர்பான விரிவான வழிகாட்டுதல்கள் இதில் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக, பள்ளி செல்லாக் குழந்தைகள், இடைநின்ற குழந்தைகள் ஆகியோரின் சேர்க்கை, தக்கவைத்தல் மற்றும் மீண்டும் பிரதான நீரோட்டத்தில் இணைத்தல் ஆகியவற்றை உறுதி செய்வதிலும், சமூக-பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதிலும், அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவை வலுப்படுத்துவதிலும் எஸ். எம்.சி.-யின் பங்கிற்கு இவ்வழிகாட்டுதல்கள் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கின்றன. மேற்கூறிய அனைத்து முயற்சிகளும் ஒன்றிணைந்து, மாணவர்களிடையே விரும்பத்தக்க கற்றல் விளைவுகளை அடைவதற்குத் துணைபுரியும். இது வளர்ந்த பாரதம் @2047 எனும் தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதில் முக்கியப் பங்காற்றும்.

இவ்வழிகாட்டுதல்கள், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான ஒரு வழிகாட்டும் குறிப்பேடாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், அவை தங்களின் உள்ளூர்ச் சூழல்கள், தேவைகள் மற்றும் முன்னுரிமைகளுக்கு ஏற்பத் தங்களின் விதிகள், செயல்முறைகள் மற்றும் அமைப்புகளை ஒருங்கிணைத்து, இணக்கமாக்கிக் கொள்ள முடியும். இறுதியாக, ஒவ்வொரு குழந்தையும் பாதுகாப்பான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பேணி வளர்க்கும் சூழலில் தரமான கல்வியைப் பெறுவதையும், தொடர்ச்சியாக முன்னேறுவதையும், தனது பள்ளிக் கல்வியை வெற்றிகரமாக முடிப்பதையும் உறுதிசெய்யும் வகையில், பள்ளிகள் மீது சமூகங்கள் கூட்டுப் பொறுப்பை ஏற்க அதிகாரம் அளிப்பதே இவ்வழிகாட்டுதல்களின் நோக்கமாகும்.

(அர்ச்சனா சர்மா அவஸ்தி)
கூடுதல் செயலாளர், டோசெல்
கல்வி அமைச்சகம்

# உள்ளடக்க அட்டவணை


1. அறிமுகம் 1

2. பள்ளி மேலாண்மைக் குழு (எஸ்.எம்.சி.) 1

2.1 எஸ்.எம்.சி. உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நெறிமுறைகள் 2

2.2 எஸ்.எம்.சி.யின் கட்டமைப்பு 3

2.3 உறுப்பினர்-செயலரின் பணிகள் மற்றும் பொறுப்புகள் 3

2.4 பதவிக்காலம் 4

2.5 எஸ்.எம்.சி.யில் பெற்றோர்/பாதுகாவலரை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கும் நடைமுறை 4

2.6 எஸ்.எம்.சி.யின் துணைக் குழுக்கள் 5

3. எஸ்.எம்.சி.யின் பணிகள் மற்றும் பொறுப்புகள் அல்லது செயல்பாடுகள் 6

4. பள்ளி மேம்பாட்டுத் திட்டம் (எஸ்.டி.பி.) 12

5. கூட்டங்கள் மற்றும் நடைமுறைகள் 14

6. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி 14

7. நிதி மேலாண்மை மற்றும் சமூகத் தணிக்கை 15

8. அமைச்சகங்கள்/துறைகளுடனான ஒருங்கிணைப்பின் மூலம் வளங்களைப் பயன்படுத்துதல் 16

9. எஸ்.எம்.சி.-களுக்கான கண்காணிப்பு மற்றும் ஆதரவு 19

10. முடிவுரை 19

இணைப்புகள் 21

## 1. அறிமுகம்

1.1 சமூக அணித்திரட்டல் மற்றும் பங்கேற்பு என்பது, பிரதிநிதித்துவப் பங்கேற்பு, நல்லாட்சி, பொறுப்புடைமை மற்றும் அமைதியான மாற்றம் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில், சமூகங்கள் தங்களின் முன்னுரிமைகள், வளங்கள், தேவைகள் மற்றும் தீர்வுகளைக் கண்டறிய அவர்களை ஈடுபடுத்தும் ஒரு செயல்முறையாகும். கல்வித்துறையைப் பொறுத்தவரையில், சமூக அணித்திரட்டலும், சமூக உறுப்பினர்களின் நெருங்கிய ஈடுபாடும் மிகவும் இன்றியமையாததவையாகும். இந்த அணுகுமுறையானது கீழிருந்து மேலான ஒரு செயல்முறையை ஊக்குவிக்கிறது; இதன் மூலம் அரசுத் திட்டங்களைத் திறம்படத் திட்டமிடவும், செயல்படுத்தவும், கண்காணிக்கவும், மதிப்பீடு செய்யவும், அச்சமூகமே அவற்றிற்குப் பொறுப்பேற்கவும் முடிகிறது. பள்ளிகள் சிறப்பாகச் செயல்படுவதற்குத் தேவையான வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை மற்றும் சமூகத்தின் கூட்டு அறிவைப் பயன்படுத்துதல் ஆகியவற்றைச் சமூகத்தின் நேரடிப் பங்கேற்பு உறுதி செய்கிறது. மேலும், திறம்பட நடைபெறும் அதிகாரப் பரவலாக்கத்தின் வாயிலாக, பள்ளி சார்ந்த செயல்பாடுகளில் சமூகத்தின் உரிமையாக்கத்தை இது உறுதிசெய்கிறது; நிர்வாகக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதோடு, நீடித்த கல்வி வளர்ச்சிக்கும் துணைபுரிகிறது.

1.2**தேசியக் கல்விக் கொள்கை (என்.இ.பி.), 2020**பள்ளிகளில் கற்றலை மேம்படுத்துவதற்காக உள்ளூர்ச் சமூகங்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் மூத்த குடிமக்களின் தீவிரப் பங்கேற்பை இது வலியுறுத்துகிறது; மேலும், தனிப்பயிற்சி, எழுத்தறிவு இயக்கங்கள், வழிகாட்டுதல், கற்பித்தல் ஆதரவு மற்றும் ஆலோசனை போன்ற பல்வேறு செயல்பாடுகளில் அவர்கள் தாமாக முன்வந்து தொண்டாற்றுவதை ஊக்குவிக்கிறது (பத்தி 3.7). என்.இ.பி. 2020 வழிகாட்டுதலின்படி, கற்றலும் சமூகமும் ஒன்றிணையும் துடிப்பான மையங்களாகப் பள்ளிகள் வளர வேண்டும். பள்ளிச் செயல்பாடுகளில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளூர் மக்கள் பங்கேற்கும்போது, அவர்கள் அக்கறை, உள்ளடக்கம் மற்றும் பெருமைக்குரிய சூழலை உருவாக்க உதவுகிறார்கள். ஒவ்வொரு பள்ளியும் குழந்தைகளுக்குக் கற்பிக்கும் இடமாக மட்டுமன்றி, முழுச் சமூகத்தையும் ஒன்றிணைக்கும் இடமாகவும் மாற முடியும்.

1.3**சமக்ர சிக்ஷா 2.0**கட்டமைப்பானது(12அக்டோபர் 2022 அன்று வெளியிடப்பட்டது) தனது 'அத்தியாயம் 13: சமூக அணித்திரட்டல்' என்பதில் பள்ளி மேலாண்மைக் குழுவின் (எஸ்.எம்.சி.) கட்டமைப்பு, செயல்பாடு உள்ளிட்டவற்றை விவரிக்கிறது. தரைமட்டத்தில் செயல்படும் இக்குழுவே, சமக்ர சிக்ஷா திட்டம் மற்றும் பள்ளிக் கல்வித் துறையின் பிற முன்னெடுப்புகளைச் செயல்படுத்துவதில் தீவிரப் பங்கு வகிக்கிறது.

1.4**குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் (ஆர்.டி.இ.) சட்டம், 2009**என்பதன் அத்தியாயம் IV: பள்ளிகள் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்புகள் என்பதன்கீழ் உள்ள, **பிரிவு (21)**பள்ளிகளில் எஸ்.எம்.சி.யின் கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகளை விவரிக்கிறது.

## 2. பள்ளி மேலாண்மைக் குழு (எஸ்.எம்.சி.)

பள்ளிக் கல்வியில் சமூகப் பங்கேற்பை வலுப்படுத்த, என்.இ.பி. 2020, சமக்ர சிக்ஷா திட்டம் மற்றும் ஆர்.டி.இ. சட்டம், 2009 ஆகியவை, பரவலாக்கப்பட்ட நிர்வாகத்தின் முக்கியக் கூறாக எஸ்.எம்.சி.களை உருவாக்குவதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன. சமூக ஒருங்கிணைப்பின் அடிப்படையாக விளங்கும் எஸ்.எம்.சி., பரவலாக்கப்பட்ட பள்ளி நிர்வாகத்தை வலுப்படுத்துவதுடன், பள்ளிக் கல்வியை வடிவமைத்து மேம்படுத்துவதில் தீவிரமாகப் பங்கேற்கச் சமூகங்களுக்கு அதிகாரமளிக்கிறது. **என்.இ.பி. 2020, சமக்ர சிக்ஷா திட்டம், ஆர்.டி.இ. சட்டம், 2009 ஆகியவற்றின் விதிமுறைகள் மற்றும் எம்.ஓ.இ.யின் (முந்தைய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் (எம்.ஹெச்.ஆர்.டி.)) சர்வ சிக்ஷா அபியான் (எஸ்.எஸ்.ஏ.) மற்றும் ராஷ்டிரிய மாத்யமிக் சிக்ஷா அபியான் (ஆர்.எம்.எஸ்.ஏ.) போன்றவற்றின் முந்தைய வழிகாட்டுதல்களைக் கருத்தில் கொண்டு, எஸ்.எம்.சி.கள் தொடர்பான பின்வரும் வழிகாட்டுதல்கள் வெளியிடப்படுகின்றன. இவ்வழிகாட்டுதல்கள் முந்தைய வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுறுத்தல்களுக்குப் பதிலாக அமைகின்றன.**

அனைவரையும் உள்ளடக்கிய, அனைவரின் பங்கேற்புடனான மற்றும் பொறுப்புணர்வை மிக்க கல்விக்கான தேசியத் தொலைநோக்குப் பார்வையுடன் உள்ளூர் விதிகள் மற்றும் நடைமுறைகளை இசைவாக்குவதற்கும், பள்ளி அளவிலான ஆளுகை வழிமுறைகளை வலுப்படுத்துவதற்கும், மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களுக்கு (யூ.டி.) இந்த வழிகாட்டுதல்கள் ஒரு குறிப்புச் சட்டகமாகச் செயல்படும்.

- ஒவ்வொரு பள்ளியும் பள்ளி மேலாண்மைக் குழுவை (எஸ்.எம்.சி.), **கல்வியாண்டு தொடங்கிய ஒரு மாதத்திற்குள்** அமைக்க வேண்டும்.
- **பள்ளி மேலாண்மை மேம்பாட்டுக் குழுவிற்குப் (எஸ்.எம்.டி.சி.) பதிலாக, இடைநிலைப் பள்ளிகள் (12-ஆம் வகுப்பு வரை) உட்பட அனைத்துப் பள்ளிகளிலும் பள்ளி மேலாண்மைக் குழுவை (எஸ்.எம்.சி.) அமைக்குமாறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.**
- இதில் அதிகாரிகள், மாணவர்களின் பெற்றோர்/பாதுகாவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்[1], கல்வியாளர்கள், பாட வல்லுநர்கள், பள்ளியின் முன்னாள் மாணவர்கள் மற்றும் பின்தங்கிய பிரிவினரின் பிரதிநிதிகள் ஆகியோர் இடம்பெறுவர்.
- குழந்தைகளின் சேர்க்கை எண்ணிக்கையின் அடிப்படையில் இக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படலாம்:

| சேர்க்கை வரம்பு | தோராயமான உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 100 மாணவர்கள் வரை | 12 –15 உறுப்பினர்கள் |
| 100 – 500 மாணவர்கள் | 15 –20 உறுப்பினர்கள் |
| 500 மாணவர்களுக்கு மேல் | 20 – 25 உறுப்பினர்கள் |

### 2.1 எஸ்.எம்.சி உறுப்பினர் தேர்வு நெறிமுறைகள்

i. எஸ்.எம்.சி.யின் மொத்த உறுப்பினர்களில் **எழுபத்தைந்து சதவீதம் (75%)** பேர், குழந்தைகளின் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களாக இருக்க வேண்டும்..ii. மீதமுள்ள

இருபத்தைந்து சதவீதம் (25%)பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், பின்வரும் நபர்களாக இருக்க வேண்டும்:

(a) உள்ளூர் அதிகார சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிலிருந்து மூன்றில் ஒரு பங்கு (1/3) உறுப்பினர்களை, உள்ளூர் அதிகார சபையே தீர்மானிக்க வேண்டும்;

(b) பள்ளியின் ஆசிரியர்களிலிருந்து மூன்றில் ஒரு பங்கு (1/3) உறுப்பினர்கள்; இவர்களைப் பள்ளியின் ஆசிரியர்களே தீர்மானிப்பர்;

(c) மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு (1/3) உறுப்பினர்கள், உள்ளூர் கல்வியாளர்கள், பாட வல்லுநர்கள், கல்வியியல் அறிஞர்கள், மூத்த மாணவர்கள், பள்ளியின் முன்னாள் மாணவர்கள் மற்றும் பள்ளியின் அண்மைப் பகுதிகளில் சேவைபுரியும் அங்கன்வாடிப் பணியாளர்கள் (ஏ.டபிள்யூ.டபிள்யூ.), அங்கீகரிக்கப்பட்ட சமூக சுகாதாரப் பணியாளர்கள் (ஆஷா) மற்றும் துணை செவிலியர்கள் (ஏ.என்.எம்.) போன்ற முன்களச் சமூகப் பணியாளர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இந்த உறுப்பினர்களைக் குழுவில் உள்ள பெற்றோர் பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பர்.

குறிப்பு:

[1]உள்ளூர்சி அமைப்பு" என்பது மாநகராட்சி, நகராட்சி, மாவட்ட ஊராட்சி, பேரூராட்சி அல்லது ஊராட்சி என எப்பெயரில் அழைக்கப்பட்டாலும் அவற்றைக் குறிக்கும்; மேலும், பள்ளியின் மீது நிர்வாகக் கட்டுப்பாடு கொண்ட அல்லது நடைமுறையிலுள்ள சட்டத்தின்படி எந்தவொரு நகரம், சிறுநகரம் அல்லது கிராமத்தில் உள்ளாட்சி அமைப்பாகச் செயல்பட அதிகாரம் பெற்ற பிற அமைப்புகளையும் இது உள்ளடக்கும்;

- **எஸ்.எம்.சி.**உறுப்பினர்களில் **ஐம்பது சதவீதம் (50%)** பெண்களாக இருக்க வேண்டும்.
- சமூக மற்றும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பிரிவினர் (எஸ்.இ.டி.ஜி.), அதாவது எஸ்.சி./ எஸ்.டி./ஓ.பி.சி. உள்ளிட்டோர் **மற்றும் சிறப்புத் தேவையுடைய குழந்தைகளின் (சி.டபிள்யூ. எஸ்.என்.) பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.**

### 2.2 எஸ்.எம்.சி.யின்

ஒவ்வொரு எஸ்.எம்.சி.யிலும் பின்வரும் உறுப்பினர்கள் இருப்பர்:

| | | |
|---|---|---|
| 1. | தேர்ந்தெடுக்கப்பட்ட பெற்றோர்/பாதுகாவலர் | தலைவர் |
| 2. | தேர்ந்தெடுக்கப்பட்ட பெற்றோர்/பாதுகாவலர் | துணைத் தலைவர் |
| 3. | அனைத்து வகுப்பு மாணவர்களின் பெற்றோர்/பாதுகாவலர் | உறுப்பினர் |
| 4. | உள்ளாட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் | உறுப்பினர் |
| 5. | பள்ளி ஆசிரியர்கள் | உறுப்பினர் |
| 6. | உள்ளூர் கல்வியாளர்கள்/பாட வல்லுநர்கள்/மூத்த மாணவர்கள்/முன்னாள் மாணவர்கள்/ஏ.டபிள்யு.டபிள்யு/ ஆஷா/ஏ.என்.எம் | உறுப்பினர் |
| 7. | முதல்வர்/தலைமையாசிரியர்/பள்ளிப் பொறுப்பாளர் | உறுப்பினர் - செயலர் |

### 2.3 உறுப்பினர்-செயலாளரின் பங்குகள் மற்றும் பொறுப்புகள்

உறுப்பினர்-செயலாளரின் கடமைகள் பின்வருமாறு:

i. கல்வியாண்டு தொடங்கிய **ஒரு மாதத்திற்குள் பள்ளி மேலாண்மைக் குழு** அமைக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

ii. உரிய நேரத்தில்**ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டத்தை**நடத்தி, பள்ளிக் குழந்தைகளின் பெற்றோர்/பாதுகாவலர்களிடையே தேர்தல் மூலம் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். (தேர்தலில் 50% பெற்றோர்/பாதுகாவலர் பங்கேற்பதை உறுதிசெய்ய வேண்டும்).

iii. புதிய எஸ்.எம்.சி அமைக்கப்பட்ட ஒரு வாரத்திற்குள், உறுப்பினர்களின் முழு விவரங்களைப் பள்ளியின் முக்கிய இடங்களில் காட்சிப்படுத்த வேண்டும். பெற்றோர்/உறுப்பினர்களின் பெயர், பதவி, தொடர்பு எண், மின்னஞ்சல் போன்றவை இடம்பெற வேண்டும். பெற்றோர்/ பாதுகாவலர் எனில், அவர்களின் பெயருடன் குழந்தையின் பெயர், வகுப்பையும் குறிப்பிட வேண்டும்.

iv. **மாதத்திற்கு ஒரு முறையாவது எஸ்.எம்.சி. கூட்டங்களை**நடத்த வேண்டும்..

v. கூட்டத்தின்போது எஸ்.எம்.சி.க்கான வருகைப் பதிவு (குறைந்தது 50%) இருப்பதை உறுதி செய்ய வேண்டும்..

vi. எஸ்.எம்.சி கூட்டங்களில் விவாதிக்க வேண்டிய**நிகழ்ச்சி நிரல்களைத்**தயாரிக்க வேண்டும்.

vii. எஸ்.எம்.சி விவரங்கள், கூட்ட அறிவிப்புகள், பங்கேற்ற உறுப்பினர்கள், நிகழ்ச்சி நிரல் மற்றும் கூட்டக் குறிப்புகள் போன்றவற்றைப் பதிவுசெய்ய விதிமுறைப்படி ஒரு பதிவேட்டைப் பராமரிக்க வேண்டும்.

viii. கூட்டத்தின் **நடவடிக்கைக் குறிப்புகள் மற்றும் முடிவுகளை** முறையாகப் பதிவு செய்து, குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும்.

ix. பள்ளி மேலாண்மைக் குழு அமைக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் அக்குழு உறுப்பினர்களுக்குத் **திறன் மேம்பாட்டுப் பயிற்சி** அளிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். மேலும்,

தேவைக்கேற்ப அவ்வப்போது பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சிகள் அல்லது பயிலரங்குகளை ஏற்பாடு செய்தல்.

x. ஒருங்கிணைந்த மாவட்டக் கல்வித் தகவல் முறைமை பிளஸ் (யு.டி.ஐ.எஸ்.இ.+) இணையதளத்தில் கிடைக்கும் **பள்ளி அறிக்கை அட்டையைப்** பள்ளியின் முக்கிய இடங்களில் காட்சிப்படுத்துதல் மற்றும் முதல் கூட்டத்தில் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு அதனைக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

xi. பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டங்கள், அதன் கட்டமைப்பு, பெற்றோர் அல்லது பாதுகாவலர்களிலிருந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல், நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைப் பள்ளி மேலாண்மைக் குழுவில் சேர்த்தல் போன்றவை தொடர்பாக மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அலுவலர்கள் வழங்கும் உத்தரவுகள் அல்லது வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுவதை உறுதி செய்தல்.

xii. பள்ளித் தலைமை ஆசிரியர், மாவட்டக் கல்வி அலுவலர் அல்லது வேறு ஏதேனும் உயர் அதிகாரியால் ஒதுக்கப்படும் பிற பொறுப்புகளையும் நிறைவேற்றுதல்.

### 2.4 பதவிக்காலம்

எஸ்.எம்.சி. உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும். புதிய குழு அமைக்கப்படும் வரை, எஸ்.எம்.சி. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும் தொடர்ந்து செயல்படலாம். எஸ்.எம்.சி. செயல்பாடுகளில் இடைவெளி ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, தற்போதைய குழுவின் பதவிக்காலம் முடிவடையும் முன்னரே புதிய குழுவை அமைக்கும் பணிகளைத் தொடங்குவது சிறந்தது. **ஓர் உறுப்பினர் மற்றொரு பதவிக்காலத்திற்கும் மறுநியமனம் செய்யப்படலாம்; ஆனால், உறுப்பினர்-செயலாளரைத் தவிர வேறு எந்த உறுப்பினரும் தொடர்ந்து இரண்டு முறைக்கு மேல் அப்பதவியில் நீடிக்க முடியாது.**

i. பின்வரும் சூழல்களில் எஸ்.எம்.சி உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடையும்:

(a) பெற்றோர்/பாதுகாவலர் உறுப்பினரின் குழந்தை பள்ளியை விட்டு வெளியேறினால்.

(b) ஓர் உறுப்பினர் குற்றவியல் வழக்கிலோ அல்லது வேறு வகையிலோ காவலில் வைக்கப்படுதல்/தண்டிக்கப்படுதல்.

(c) உறுப்பினர் வட்டாரத்தை/மாவட்டத்தை விட்டு இடம்பெயர்ந்தால்.

(d) உறுப்பினர் திடீரென மரணமடைந்தால்.

(e) ஓர் உறுப்பினர் எவ்வித தகவலும் இன்றி தொடர்ந்து நான்கு கூட்டங்களில் பங்கேற்காமல் இருந்தால்.

ii. புள்ளி (I)-இல் கூறப்பட்டுள்ள காரணங்களில் ஏதேனும் ஒன்றின் காரணமாக ஏற்படும் தற்செயல் காலியிடங்கள், செயல்படுத்தும் அதிகார அமைப்பு/மாநில அரசால் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையின்படி நிரப்பப்பட வேண்டும்.

### 2.5 எஸ்.எம்.சி. பெற்றோர்/பாதுகாவலர் உறுப்பினர்களின் தேர்தல் நடைமுறை

பள்ளி நிர்வாகத்தில் சமுதாயத்தின் அர்த்தமுள்ள பங்கேற்பை உறுதி செய்வதற்காக, பள்ளி மேலாண்மைக் குழுவின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுப்பினர்களுக்கான தேர்தல் ஜனநாயக, வெளிப்படையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய முறையில் நடத்தப்பட வேண்டும். மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் தங்களின் விதிகள் அல்லது உத்தரவுகளுக்கு ஏற்ப, பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் தேர்தல் மற்றும் நியமனத்திற்கான விரிவான நடைமுறையைத் தாங்களே வரையறுக்கலாம். கீழே விவரிக்கப்பட்டுள்ள தேர்தல் நடைமுறை வழிகாட்டுதலுக்காக மட்டுமே வழங்கப்பட்டுள்ளது:

i. கல்வியாண்டின் தொடக்கத்தில், சம்பந்தப்பட்ட மாநிலம் அல்லது யூனியன் பிரதேசம் வகுத்துள்ள விதிமுறைகளின்படி தேர்தலை நடத்துவதற்கான கால அட்டவணை மற்றும் நடைமுறைகளைத் தெளிவாகக் குறிப்பிட்டு, பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ள அனைத்துக்

குழந்தைகளின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கும் அறிவிப்பு ஒன்றை வெளியிடுவதன் மூலம், பள்ளித் தலைமை ஆசிரியர் தேர்தல் செயல்முறையைத் தொடங்க வேண்டும்.

ii. பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ள ஒவ்வொரு குழந்தையின் (சேர்க்கைப் படிவத்தில் ஏற்கெனவே பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள) பெற்றோர் அல்லது காப்பாளரில் ஒருவர் மட்டுமே இத்தேர்தலில் பங்கேற்கத் தகுதியுடையவர் ஆவார்.

iii. பெற்றோர் அல்லது காப்பாளர்கள் தங்களையோ அல்லது பள்ளி சமூகத்தைச் சேர்ந்த தகுதியும் விருப்பமும் உள்ள பிற பெற்றோர்/காப்பாளர்களையோ முன்மொழியலாம். சமூக மற்றும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பிரிவினர் மற்றும் சிறப்புத் தேவையுடைய குழந்தைகளின் பெற்றோருக்கான போதிய பிரதிநிதித்துவம், பெண்களுக்கான 50% பிரதிநிதித்துவம் மற்றும் பள்ளியின் அனைத்து வகுப்புகளுக்குமான பிரதிநிதித்துவம் ஆகியவை உறுதி செய்யப்பட வேண்டும்.

iv. வேட்பாளர்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருக்கும் பட்சத்தில், கைகளை உயர்த்துதல் அல்லது குரல் வாக்கெடுப்பு மூலம் தேர்தல் நடத்தப்பட வேண்டும்; இருப்பினும், ஏதேனும் சர்ச்சை அல்லது தீர்க்கப்படாத கருத்து வேறுபாடு எழும் நிலையில், நியாயமான முறையில் தேர்தல் நடைபெறுவதை உறுதிசெய்ய ரகசிய வாக்கெடுப்பு முறை பின்பற்றப்படலாம்.

v. வாக்கெடுப்பு நடைபெறும் நேரத்தில், பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ள குழந்தைகளின் பெற்றோர் அல்லது காப்பாளர்களில் குறைந்தபட்சம் 50% பேர் கட்டாயம் வருகை தந்திருக்க வேண்டும்.

vi. நடுநிலைமை மற்றும் வெளிப்படைத்தன்மையைப் பேணுவதற்காக, நியமிக்கப்பட்ட கல்வி அதிகாரி அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரால் இத்தேர்தல் செயல்முறை கண்காணிக்கப்படலாம்.

vii. இச்செயல்முறை முடிவடைந்தவுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்துப் பெற்றோர் அல்லது காப்பாளர் உறுப்பினர்களின் பெயர்களும் நிறுவனத் தலைவரால் அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட வேண்டும்.

**எஸ்.எம்.சி. அமைக்கப்பட்ட பிறகு, புதிதாக அமைக்கப்பட்ட அக்குழுவின் முதல் கூட்டத்தை அடுத்த வேலை நாளிலோ அல்லது அதிகபட்சம் ஒரு வாரத்திற்குள்ளோ நடத்தலாம். தலைவர் மற்றும் துணைத் தலைவர் இந்த முதல் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.**

### 2.6 எஸ்.எம்.சி. துணைக்குழுக்கள்

பள்ளி மேலாண்மைக் குழுவின் திறமையான செயல்பாட்டிற்காக, தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர் செயலர் ஆகியோர் தங்கள் தேவைக்கு ஏற்ப அக்குழுவின் உறுப்பினர்களிலிருந்து துணைக்குழுக்களை அமைக்கலாம். இக்குழுவிற்குப் பின்வரும் இரண்டு துணைக்குழுக்கள் துணைபுரியலாம்:

(அ) **பள்ளிக் கட்டடக் குழு:** பள்ளி உட்கட்டமைப்பின் கட்டுமானம், புதுப்பித்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு தொடர்பான திட்டமிடல், மதிப்பீடு செய்தல், மேலாண்மை, கண்காணிப்பு, மேற்பார்வை, அறிக்கையளித்தல் மற்றும் கணக்குகளைப் பராமரித்தல் ஆகியவற்றுக்குப் பள்ளிக் கட்டடக் குழு பொறுப்பேற்கலாம். இது பாதுகாப்பு, குழந்தைகளுக்கான மற்றும் பாலின உணர்திறன் கொண்ட வசதிகள், அனைவருக்கும் அணுகக்கூடிய வசதி, பரிந்துரைக்கப்பட்ட நிதி மற்றும் தொழில்நுட்பத் தரநிலைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றை உறுதி செய்வதோடு, பாதுகாப்பான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் கற்றலுக்கு உகந்த சூழலை உருவாக்குவதற்காக அனைத்துக் கட்டுமானப் பணிகளும் குறித்த நேரத்தில் செயல்படுத்தப்படுவதைத் தீவிரமாகக் கண்காணித்து உறுதி செய்யலாம்.

(ஆ) **கல்விக் குழு:** திட்டமிடல், மேலாண்மை, கண்காணிப்பு, மேற்பார்வை, அறிக்கையளித்தல், யு-டைஸ் பிளஸ் (UDISE+) தரவு சேகரிப்பு உள்ளிட்ட அனைத்துக் கல்விசார் செயல்பாடுகளுக்கும் கல்விக் குழு பொறுப்பேற்கலாம். சமூக-பொருளாதார, பாலின மற்றும் குறைபாடுகள் தொடர்பான தடைகளைக் களைதல்; ஆசிரியர் மற்றும் மாணவர் வருகையைக் கண்காணித்தல்; வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்; மாணவர்களின்கற்றல் அடைவுகளைக் கண்காணித்தல்; மேம்பட்ட மற்றும் வளர்ச்சிசார் கற்றல் செயல்பாடுகளை ஊக்குவித்தல்; மற்றும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒட்டுமொத்த கல்வி, சமூக மற்றும் ஆளுமை வளர்ச்சியை மேம்படுத்துதல் ஆகியவற்றின்

மூலம் கல்வியின் தரம் மற்றும் சமத்துவத்தில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை இக்குழு உறுதி செய்ய வேண்டும். இந்தப் பொறுப்புகளை ஏற்றுச் செயல்படுவதன் மூலம், மாணவர்களின் அடைவுகளுக்கும் பள்ளிச் சூழல் மண்டலத்தின் ஒட்டுமொத்த கல்விசார் நிலைக்கும் முதன்மைப் பாதுகாவலராக இக்குழு விளங்குகிறது.

### 3. எஸ்.எம்.சி.யின் பங்கு, பொறுப்புகள் அல்லது பணிகள்

பள்ளி மேலாண்மைக் குழுவானது (எஸ்.எம்.சி.) **பள்ளி நிர்வாகம் சிறப்பாகச் செயல்படுவதை உறுதி செய்வதிலும், கல்வியின் தரத்தை மேம்படுத்துவதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது**. பள்ளியின் ஒட்டுமொத்த செயல்பாட்டைக் கண்காணித்தல் மற்றும் சமக்ர சிக்ஷா, பி.எம். ஸ்ரீ, பி.எம். போஷான் உள்ளிட்ட கல்வித் திட்டங்கள் உரிய நேரத்திலும் திறம்படவும் செயல்படுத்தப்படுவதைக் கண்காணித்தல் ஆகியவை இதன் முதன்மைச் செயல்பாடுகளில் அடங்கும். உள்கட்டமைப்புக் குறைபாடுகளைக் கண்டறிதல், தற்போதுள்ள வசதிகளை ஆய்வு செய்தல் மற்றும் பள்ளியின் குறிப்பிட்ட தேவைகளைக் கருத்தில் கொண்டு, ஒரு விரிவான பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தை (எஸ்.டி.பி.)



தயாரித்துப் பரிந்துரைக்கும் பொறுப்பை எஸ்.எம்.சி. கொண்டுள்ளது. பள்ளியின் உள்கட்டமைப்பை மேம்படுத்த சி.எஸ்.ஆர். (பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வு) அமைப்புகளிடமிருந்து நன்கொடைகள் அல்லது பங்களிப்புகளைத் திரட்டும் பொறுப்பையும் இது ஏற்கும். மேலும், உரிய அரசாங்கம், உள்ளாட்சி அமைப்புகள் அல்லது பிற ஆதாரங்களில் இருந்து பெறப்படும் மானியங்கள் முறையாகப் பயன்படுத்தப்படுவதைக் கண்காணிக்கும் அதே வேளையில், பள்ளிக்கும் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்தப் பெற்றோர் மற்றும் சமூகத்தின் பங்களிப்பையும் இது ஊக்குவிக்கும். பள்ளியின் தேவைகளைக் கண்டறிந்து, செயல்படுத்தக்கூடிய திட்டங்களைத் தயாரிப்பதன் மூலம், பள்ளி, சமூகம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடையே இணைப்பை ஏற்படுத்தி, அனைவரையும் உள்ளடக்கிய, பாதுகாப்பான மற்றும் சிறந்த வளங்களைக் கொண்ட கற்றல் சூழலை எஸ்.எம்.சி. உருவாக்குகிறது. இதற்கேற்ப, எஸ்.எம்.சி. உறுப்பினர்களின் பங்கு மற்றும் பொறுப்புகளின் முக்கியப் பிரிவுகள் பின்வருமாறு அமையலாம்:

i. ****அனைத்து குழந்தைகளுக்கும் சேர்க்கை, தொடர்ச்சியான வருகை மற்றும் உள்ளடக்கிய கற்றல் வாய்ப்புகளை உறுதி செய்தல்:**** எஸ்.இ.டி.ஜி. மற்றும் சி.டபுள்யு.எஸ்.என். பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகள் மீது சிறப்புக் கவனம் செலுத்தி, அனைத்துக் குழந்தைகளின் சேர்க்கை மற்றும் முறையான வருகையைப் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் உறுதி செய்ய வேண்டும். பள்ளிக் கல்வியைத் தொடர்வதிலும் முடிப்பதிலும் எந்தவொரு குழந்தையும் எவ்விதப் பாகுபாட்டையோ தடையையோ எதிர்கொள்ளாமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும். பள்ளியில் எந்தவொரு குழந்தையும் துன்புறுத்தல் அல்லது வன்கொடுமைக்கு ஆளாகும் நிகழ்வுகள் இல்லை என்பதை உறுதி செய்வதில் பள்ளிக்கு இக்குழு ஆதரவளிக்க வேண்டும். அத்தகைய நிகழ்வுகள் ஏதேனும் ஏற்பட்டால் உடனடியாக உரிய அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட வேண்டும். பிரஷஸ்த் செயலி மற்றும் பிற முறைகளைப் பயன்படுத்திச் சிறப்புத் தேவையுடைய குழந்தைகளை அடையாளம் காண்பதில் பள்ளிக்கு இக்குழு உதவ வேண்டும்;

மேலும், அனைத்துச் செயல்பாடுகளிலும் அவர்களை உள்ளடக்குவதற்கு ஆதரவளிக்க வேண்டும்.

ii. **இடைநின்ற, பள்ளி செல்லாக் குழந்தைகளைப் பள்ளிகளில் இணைப்பதற்கான சேர்க்கை முகாம்கள்:** பள்ளி, சமூகத் தரவுகள் மூலம் இடைநின்ற, பள்ளி செல்லாக் குழந்தைகளைக் கண்டறிந்து வயதுக்கேற்ற வகுப்பில் சேர்க்க, பள்ளி மேலாண்மைக் குழுவினர் ஆசிரியர்களுடன் இணைந்து செயல்பட வேண்டும். இலவசக் கட்டாயக் கல்வியை வீடுவீடாகச் சென்றும், பெற்றோர்-மாணவர் ஆலோசனை, உள்ளூர் ஊடகங்கள், சமூக வானொலி, கிராம சபைகள் வாயிலாகவும் பரவலாக விளம்பரப்படுத்தலாம். எந்தவொரு குழந்தையும் கல்வியை இழக்காமல் இருக்க முழுமுயற்சி எடுக்கப்பட வேண்டும். பள்ளி செல்லாக் குழந்தைகள் மற்றும் முன்பருவப் பள்ளியிலிருந்து (பால்வாடிகா/அங்கன்வாடி) 1ஆம் வகுப்பு, அடிப்படை முதல் ஆயத்த நிலை (வகுப்பு 2-3), ஆயத்த முதல் நடுநிலை (வகுப்பு 5-6), நடுநிலை முதல் இடைநிலை (வகுப்பு 8-9) வரை மாறும் மாணவர்களின் தரவுகளைப் புதுப்பிக்க இக்குழு உதவலாம்.

iii. **மாணவர் சலுகைகள் உரிய நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்தல்:** தகுதியான மாணவர்களுக்கு இலவசப் பாடநூல்கள், சீருடைகள், கல்வி உதவித்தொகை, ஊக்கத்தொகை மற்றும் பிற சலுகைகள் உரிய நேரத்தில் வழங்கப்படுவதை மேலாண்மைக் குழுவினர் உறுதி செய்ய வேண்டும்.

iv. **பெற்றோர்-ஆசிரியர் கூட்டங்களுக்கு (பி.டி.எம்.) ஆதரவளித்தல்:** கல்வி, விளையாட்டுகள், உடற்தகுதி, சுகாதாரம், கலைகள், நடத்தை உள்ளிட்ட பள்ளிச் செயல்பாடுகளில் மாணவர்களின் திறனைப் பகிர்ந்துகொள்ள முறையானபெற்றோர்-ஆசிரியர்ர் கூட்டங்களை நடத்த மேலாண்மைக் குழு முழுமையாக உதவலாம். குழந்தைகளின் கல்விப் பயணத்தில் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களைச் சேர்க்க இக்கூட்டங்கள் சிறந்த வழியாகும்.

v. **கல்வித் திட்டமிடல் மற்றும் ஆதரவு:** சமக்ர சிக்ஷா திட்டம், தேசிய கல்விக் கொள்கை 2020-இன் விதிகள், தரநிலைகளைப் பள்ளிகள் பின்பற்றுவதை இக்குழுவினர் உறுதி செய்ய வேண்டும். ஆசிரியர்களின் முறையான வருகை, உரிய நேரத்தில் பாடங்களை முடித்தல், குழந்தைகளின் முன்னேற்றத்தைப் பெற்றோர் கூட்டத்தில் பகிர்தல் ஆகியவற்றைக் கண்காணிக்க வேண்டும். ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்க்கவும், அவர்களைக் கற்பித்தல் பணியில் மட்டும் ஈடுபடுத்தவும் தேவையான நடவடிக்கைகளை இக்குழு ஆதரிக்கலாம்.

கற்பித்தல்-கற்றல் முறைகளை வலுப்படுத்தி மாணவர் கற்றல் விளைவுகளை மேம்படுத்த, பள்ளி நாள்காட்டி தயாரிப்பு, வகுப்பறை கவனிப்பு மற்றும் கற்றல் குறைகளைக் கண்டறிவதில் ஆசிரியர்களுக்கு எஸ்.எம்.சி உதவ வேண்டும். ஆசிரியரின் தொடர்விடுப்பைக் கற்றல் தொடர்ச்சி பாதிக்காதவாறு அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும். கற்றலை ஈடுபாட்டுடனும் சமூகத் தொடர்புடையதாகவும் ஆக்கவும், புத்தகப் பையில்லாத நாட்களை வளப்படுத்தவும் எஸ்.எம்.சி செய்யவேண்டியவை:

- **சமுதாயம் சார்ந்த கற்றல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்ய உதவுதல்,** அதாவது அறிவியல் கண்காட்சிகள், பாரம்பரியப் பயணங்கள் அல்லது சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பேரணிகள் போன்றவற்றின் மூலம் அனுபவக் கற்றலை ஊக்குவித்தல்.
- **செயல் திட்ட அடிப்படையிலான கற்றலை மேம்படுத்த ஆதரவளித்தல்;** நீர் சேமிப்பு, கழிவு மேலாண்மை அல்லது நீடித்த வேளாண்மை போன்ற சமுதாயப் பிரச்சனைகளில், வகுப்பறை அறிவை அன்றாட வாழ்வியல் சவால்களுடன் இணைத்து இக்கற்றலைச் செயல்படுத்துதல்.
- **திறன்களுக்கான தேவைகளை ஒருங்கிணைத்து மேம்படுத்துதல்;** என்.இ.பி. 2020 வழிகாட்டுதல்களின்படி, உள்ளூர் வணிகங்கள் மற்றும் தொழில்துறைகளின் தேவைகளுக்கு ஏற்பத் தொடர்புடைய திறன்களை ஒருங்கிணைத்து, திறன் கல்விக்கான உள்ளகப் பயிற்சிகள் அல்லது தொழிற்பயிற்சிகளை வழங்க உதவுதல்.

vi. **அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு எஃப்.எல்.என். இலக்குகளை அடைவதில் ஆதரவு:** நிபுண் பாரத் மிஷன் (NIPUN Bharat Mission)[2]-இன் கீழ் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு (எஃப்.எல்.என்.) இலக்குகளை அடைவதற்கு, பள்ளி மேலாண்மைக் குழு (எஸ்.எம்.சி) சமுதாயம் மற்றும் பெற்றோரின் ஈடுபாட்டை மேலும் ஊக்குவிக்க வேண்டும். தொடக்க வகுப்புகளில் குழந்தையின் தாய்மொழியைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல், உள்ளூர் மொழியில் வாசிப்பதற்கான இடங்களை உருவாக்குதல், கதை சொல்லும் நிகழ்வுகள் மற்றும் பெற்றோரால் வழிநடத்தப்படும் வாசிப்பு மன்றங்கள் ஆகியவற்றின் மூலம் ஒவ்வொரு பள்ளியிலும் தரமான கல்விக்கான கூட்டுப் பொறுப்புணர்வை வளர்க்கலாம். ஆசிரியர்கள் மற்றும் சமூகத் தொண்டர்களால் பன்மொழி கற்றல்-கற்பித்தல் பொருட்களை உருவாக்குவதற்கும் பள்ளி மேலாண்மைக் குழு உதவலாம்... அனைத்து மாணவர்களும் தங்களின் வகுப்புக்கு ஏற்ற அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு (எஃப்.எல்.என்) திறன்களைப் பெறுவதை உறுதி செய்வதன் மூலம், பள்ளியை 'நிபுண்' (NIPUN) பள்ளியாக மாற்றுவதற்கு, குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்குப் பள்ளி மேலாண்மைக் குழு ஆதரவளிக்க வேண்டும். ஆசிரியர்களுடன் இணைந்து, உள்ளூர் இளைஞர்கள் அல்லது தன்னார்வலர்கள் அவ்வப்போது சமுதாயக் கற்றல் திருவிழாக்கள், வாசிப்புப் பிரச்சாரங்கள் அல்லது அதுபோன்ற முன்முயற்சிகளை ஏற்பாடு செய்து, மாணவர்களின் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு சார்ந்த முன்னேற்றத்தை மதிப்பிடவும், மேம்படுத்தவும், கொண்டாடவும் முடியும். குழந்தைகள் மகிழ்ச்சியுடன் கற்பதையும், விளையாட்டு வழிக் கற்றலையும், அங்கன்வாடியிலிருந்து பள்ளிக்கு எந்தவிதத் தடையுமின்றி மாறுவதையும் உறுதி செய்வதற்காக, அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு இடையே கூட்டாகத் திட்டமிடுதல் மற்றும் செயல்பாடுகளைப் பள்ளி மேலாண்மைக் கு(எஸ். எம்.சி.)C) ஊக்குவிக்க வேண்டும். பாரம்பரிய அறிவு, கலைகள் மற்றும் உள்ளூர் மரபுகளைப் பள்ளிச் செயல்பாடுகளுடன் ஒருங்கிணைக்க, உள்ளூர்க் கலைஞர்கள், கைவினைஞர்கள் மற்றும் பெரியவர்களுடன் இந்தக் குழு இணைந்து செயல்படலாம். உள்ளூர்ப் பாடல்கள், கவிதைகள், கைவினைப்பொருட்கள் மற்றும் திருவிழாக்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதன் மூலம், மாணவர்களிடையே திறன் மேம்பாட்டையும் பண்பாட்டு வேர்களையும் இது ஆதரிக்கிறது. பெற்றோர் மற்றும் சமுதாய ஈடுபாடு குறித்த விரிவான வழிகாட்டுதல்கள், நிபுண் பாரத் செயலாக்க வழிகாட்டுதல்களின் (2021) அத்தியாயம் 14-ல் வழங்கப்பட்டுள்ளன.

vii. **பிரதம மந்திரி போஷான் சக்தி நிர்மாண் (பி.எம். போஷான்) மற்றும் சுகாதார முன்முயற்சிகள்:** பள்ளி மேலாண்மைக் குழு (எஸ்.எம்.சி) உறுப்பினர்கள் பி.எம். போஷான் திட்டத்தின் அன்றாட நிர்வாகத்தைக் கண்காணிப்பதன் மூலம் அத்திட்டம் செயல்படுத்தப்படுவதைச் சுறுசுறுப்புடன் கண்காணிக்க வேண்டும். குழந்தைகளுக்கு உணவு வழங்குவதற்கு முன், ஆசிரியர்களுடன் இணைந்து சுழற்சி முறையில் உணவைச் சுவைத்துப் பார்ப்பதன் மூலம் உணவின் தரத்தை உறுதி செய்ய வேண்டும். குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதற்கு கூடுதல் உணவுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில், பள்ளி மேலாண்மைக் குழு கூட்டங்களின்போது திதி போஜன் (Tithi Bhojan) திட்டத்தின் கருத்து மற்றும் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கலாம். திதி போஜன் என்பது மக்களுக்கு உணவளிக்கும் இந்திய பாரம்பரிய வழக்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமுதாயப் பங்கேற்பு முயற்சியாகும். இந்த முயற்சியின் கீழ், பிறந்தநாள், திருமண நாள், திருமணங்கள், பல்வேறு பண்டிகைகள் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நாட்கள் போன்ற சிறப்பு நிகழ்வுகளில் சமுதாய உறுப்பினர்கள் குழந்தைகளுக்குக் கூடுதல் உணவுப்

[2] தேசியக் கல்விக் கொள்கை 2020-இன் கீழான ஒரு தேசிய இயக்கமே நிபுண் பாரத் (புரிதலுடன் கூடிய வாசிப்பு மற்றும் எண்ணறிவில் திறனை அடைவதற்கான தேசிய முன்முயற்சி) ஆகும். 2026-27 ஆம் ஆண்டிற்குள், ஒவ்வொரு குழந்தையும் 2-ஆம் வகுப்புக்குள் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணறிவை அடைவதை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும். அடிப்படை நிலையில் வாசிப்பு, எழுதுதல் மற்றும் எண்ணறிவில் அந்தந்த வகுப்பிற்கு ஏற்ற திறன்களை அடைவதே இவ்வியக்கத்தின் இலக்காகும். இதற்கான வழிகாட்டுதல்கள் இங்கு கிடைக்கின்றன: https://www.education.gov.in/sites/upload_files/mhrd/files/nipun_bharat_eng1.pdf

பொருளாகவோ அல்லது முழு உணவாகவோ ஊட்டச்சத்துள்ள மற்றும் ஆரோக்கியமான உணவை வழங்குகிறார்கள். உள்ளூர் உணவு வகைகளைச் சேர்ப்பது குறித்தும், மாணவர் மற்றும் சமுதாயத் தொண்டர்களின் பங்கேற்புடன், 'ஷ்ரம் தான்' (Shram Daan) மூலம் பள்ளி ஊட்டச்சத்துத் (சமையலறை) தோட்டங்களை உருவாக்குதல் மற்றும் பராமரிப்பது குறித்தும், பெற்றோர் மற்றும் சமுதாய உறுப்பினர்களுடன் விவாதிக்கலாம். மேலும், சுகாதார அதிகாரிகளின் ஒருங்கிணைப்புடன், முறையான உடல்நலப் பரிசோதனைகள், சுகாதார விழிப்புணர்வு நிகழ்வுகள் மற்றும் ஊட்டச்சத்து விழிப்புணர்வுச் செயல்பாடுகளைப் பள்ளி மேலாண்மைக் குழு(எஸ்.எம்.சி)) ஏற்பாடு செய்யலாம்.

viii. **உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் கண்காணிப்பு:** தேசியக் கல்விக் கொள்கை 2020-இன்(என்.இ.பி. 2020)) விதிகளுக்கு ஏற்ப, கற்றல் உதவிப்பொருள்களை உருவாக்குதல்டடம் (Building as Learning Aid - BaLA) திட்டம், டிஜிட்டல் கற்றல் கருவிகளை ஊக்குவித்தல், அறிவியல் ஆய்வகங்களை மேம்படுத்துதல், அடல் டிங்கரிங் ஆய்வகங்கள் (Atal Tinkering Labsஏ.டி.எல்.கள்)s), STEM (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்) ஆய்வகங்கள், விளையாட்டு அறை மற்றும் உபகரணங்கள், பள்ளியில் உள்ள நூலகம் மற்றும் செயல்பாடு சார்ந்த கற்றல் இடங்கள் உள்ளிட்ட பல்வேறு கல்வி முன்முயற்சிகளுக்குப் பள்ளி மேலாண்மைக் (எஸ்.எம்.சி)MC) உறுப்பினர்கள், சமுதாய உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் தீவிரமாகப் பங்களிக்கலாம். முறையான பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொண்டு, பள்ளியைத் தூய்மையாகவும், நல்ல முறையிலும் பராமரிப்பதன் மூலம் குழந்தைகளுக்கு உகந்த கற்றல் சூழலை வளர்ப்பதற்கும் அவர்கள் ஆதரவளிக்கலாம். குடிநீர், கழிப்பறைகள், சுற்றுச்சுவர், அணுகு சாலைகள், சாய்தளங்கள் போன்றவற்றுக்கான ஏற்பாடுகளைச் சம்பந்தப்பட்ட பிற துறைகளுடன் இணைந்து உறுதி செய்யலாம்.

ix. **நிதி மேலாண்மை:** பள்ளியின் நிதியைப் பாதுகாப்பாக வைத்திருத்தல், செலவுகளை முறையாகக் கட்டுப்படுத்துதல், சரியான நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு உரிய நேரத்தில் பணம் செலுத்துதல் மற்றும் நிதிப் பதிவேடுகளைத் துல்லியமாகப் பராமரித்தல் உள்ளிட்ட முறையான நிதி மேலாண்மையை உறுதி செய்யப் பள்ளியின் வரவு-செலவுத் திட்டத்தைப் பள்ளி மேலாண்மைக் குழு(எஸ்.எம்.சி)) மதிப்பாய்வு செய்ய வேண்டும். பள்ளியின் ஆண்டு வரவு-செலவு அறிக்கையைத் தயாரிப்பதில் இக்குழு உதவி செய்ய வேண்டும்; அத்துடன், எந்தவொரு நிதி முறைகேடும் நடைபெறாமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

வரவிருக்கும் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் பங்களிக்க வேண்டும்; மேலும், தகுந்த காரணங்களுடன் புதிய செலவினங்களையும் அவர்கள் முன்மொழியலாம். அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளுக்கு உட்பட்டுச் செயல்படும் பட்சத்தில், பள்ளி முதல்வர் அல்லது தலைமை ஆசிரியருக்கு வழங்கப்பட்ட அதிகார வரம்புகளுக்கு அப்பாற்பட்ட நிதி அதிகாரங்களைப் பயன்படுத்த இக்குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

x. **சமூகத் தணிக்கை மற்றும் கண்காணிப்பில் உதவுதல்:** பள்ளிச் செயல்பாடுகள் மற்றும் சமக்ர சிக்ஷா போன்ற அரசுத் திட்டங்களைத் தொடர்ந்து கண்காணிப்பதில் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களின் பங்கு முக்கியமானது. பள்ளி வளர்ச்சி, மாணவர் சேர்க்கை மற்றும் தக்கவைத்தலை மேம்படுத்தவும்,இடைநிற்றலைக்க் குறைக்கவும், முறையான திட்டமிடல், மேலாண்மை மற்றும் சமுதாயப் பங்கேற்பை உறுதிசெய்வது இவர்களின் பொறுப்பாகும். சமூகத் தணிக்கையின்போது, கிராம சபைக் கூட்டங்கள், பொது விசாரணைகளில் இவர்கள் தீவிரமாகப் பங்கேற்பதோடு, தணிக்கை முடிவுகளின்படி பள்ளி அளவில் நடவடிக்கை எடுக்கப்படுவதைக் கண்காணிக்கவும் வேண்டும்.

xi. **சமுதாயப் பங்கேற்பு மற்றும் வளங்களைத் திரட்டுதல்:** பெற்றோர், முன்னாள் மாணவர்கள், தன்னார்வலர்கள், பெருநிறுவனங்கள் மற்றும் உள்ளூர் அமைப்புகளை ஈடுபடுத்தி, அவர்களின்

நேரம், நிபுணத்துவம் மற்றும் வளங்களைப் பங்களிக்கச் செய்வதன் மூலம், சமுதாயப் பங்கேற்பு மற்றும் உத்திசார் வளங்களைத் திரட்டும் கூட்டுச் சூழலை உருவாக்கி, பள்ளியின் மேம்பாட்டைப் பள்ளி மேலாண்மைக் குழு வழிநடத்த வேண்டும். வளங்களைத் திரட்டும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, பள்ளி உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் கல்வி, கற்பித்தல் ஆதரவு உள்ளிட்ட தர மேம்பாட்டு முயற்சிகளுக்கு ஆதரவளிக்க, உள்ளூர் நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து (பி.எஸ்.யு.) கிடைக்கும் பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வு (சி.எஸ்.ஆர்.) நிதியைப் பள்ளி மேலாண்மைக் குழு கண்டறிந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பள்ளிகளில் இந்த முயற்சிகளை முறையாகக் கண்காணிப்பதற்கும் அறிக்கையிடுவதற்கும் ஏதுவாக, குடிமைச் சமூக அமைப்புகளையும் (சி.எஸ்.ஓ.) சமுதாயத் தலைவர்களையும் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் ஈடுபடுத்தி, அனைத்துப் பங்காளர்களுக்கும் நீண்டகாலத் தாக்கம் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய வேண்டும். இதன் கீழ் எழுத்தறிவுக்காக எழுத்தறிவில்லாதவர்கள் மற்றும் தன்னார்வலர்களைக் கண்டறியச் சமுதாயம் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

சமூகத்தில் உள்ள அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்றலைப் புரிந்துகொள்ளுதல் (உல்லாஸ்[3]) (நவ பாரத் சக்ஷர்தா காரியக்ரம்) திட்டத்தின் மூலம் கல்வியில் சமூக உரிமையாண்மை மற்றும் சமூகப் பொறுப்புணர்வினை வலுப்படுத்துதல்.

உள்ளூர் வாசிகள், முன்னாள் மாணவர்கள் மற்றும் ஓய்வுபெற்ற வல்லுநர்கள் பள்ளிகளுக்குத் தீவிரமாகப் பங்களிக்க முடியும்; அவர்கள் **வழிகாட்டிகளாகவும் தன்னார்வலர்களாகவும்**செயல்பட்டு, **வித்யாஞ்சலி**[4]திட்டத்தின் கீழ், மாணவர்களுக்கு அனுபவ அடிப்படையிலான வழிகாட்டுதலை வழங்கலாம். கல்வி அமைச்சகத்தின் **வித்யஞ்சலி முன்முயற்சியில்** (https://vidyanjali.education.gov.in) மக்கள் பங்கேற்பதை ஊக்குவிக்கப் பள்ளிக் மேலாண்மைக் குழு சமூக ஒருங்கிணைப்பை எளிதாக்க வேண்டும்; இதன் மூலம் கற்றல் அனுபவங்களை மேம்படுத்தி, மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு உதவும் தன்னார்வ மற்றும் சமூக ஆதரவுக் கலாச்சாரத்தை நிலைநிறுத்த முடியும்.

xii. **பள்ளிகளில் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்தல்:** அனைத்துக் குழந்தைகளுக்கும் பாதுகாப்பான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் குழந்தைகளுக்கான தோழமையான சூழலை ஒவ்வொரு பள்ளியும் வழங்குவதைப் பள்ளி மேலாண்மைக் குழு உறுதி செய்ய வேண்டும். அவர்கள் கண்டிப்பாக உடல் அல்லது மன ரீதியான துன்புறுத்தல், பாகுபாடு அல்லது எந்தவொரு வகையான வன்கொடுமையிலிருந்தும் பாதுகாப்பது உள்ளிட்ட குழந்தைகள் உரிமைகளைப் பேணிக் காக்க வேண்டும். பள்ளிப் பாதுகாப்பு உறுதிமொழி, பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (போக்சோ சட்டம்) மற்றும் உள்ளகப் புகார்க் குழு (ஐ.சி.சி.) தொடர்பான தகவல்கள் பள்ளியில் தெளிவாகக் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

பள்ளி மேலாண்மைக் குழு (எஸ்.எம்.சி.) உறுப்பினர்கள், பள்ளி நிர்வாகத்தினர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்-ஆசிரியர் கழகங்களுடன் (பி.டி.ஏ.) தொடர்ந்து கூட்டங்களை நடத்தி, பள்ளியின் பாதுகாப்பு மற்பாதுகாப்பிற்கான திட்டங்களைடத்தை உருவாக்குவதிலும், மதிப்பாய்வு செய்வதிலும் தீவிரமாகப் பங்கேற்க வேண்டும். கேலிவதைத் தடுப்பு மற்றும் குழந்தை பாலியல் வன்கொடுமை (சி.எஸ்.ஏ.) குறைதீர்க்கும் குழுக்களின் முடிவுகளை எஸ்.எம்.சி. கூட்டங்களில் விவாதிக்க வேண்டும். எஸ்.எம்.சி. உறுப்பினர்களை உள்ளடக்கிய

[3] இந்தியாவின் முதன்மைத் திட்டமான உல்லாஸ், கல்வியைத் தவறவிட்ட 15+ வயதினருக்கு அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவு, டிஜிட்டல் மற்றும் வாழ்க்கைத் திறன்களை அளிக்கிறது. குடிமக்களுக்கு அதிகாரமளித்து தேசியக் கற்றல் இயக்கத்தை வளர்க்க, என்.இ.பி 2020-க்கு ஏற்ப தன்னார்வலர் சார்ந்தகலப்பு முறைபின (இணையம்/நேரடி) முறையை இது பயன்படுத்துகிறது.

[4] வித்யாஞ்சலி என்பது அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், தன்னார்வச் சேவைகள், சொத்துகள், பெருநிறுவனங்கள் அல்லது பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து சி.எஸ்.ஆர். ஆதரவு மற்றும் பொதுமக்களின் நன்கொடைகளை வெளிப்படையான மற்றும் முறையான வழியில் பெறுவதற்கு உதவும் ஒரு பிரத்யேக மின்னணுத் தளமாகும்.

பள்ளி பாதுகாப்புக் குழு, ஒவ்வொரு காலாண்டிலும் வளாகத்தில் ஒரு 'பாதுகாப்பு நடைப்பயணத்தை' மேற்கொண்டு, அனைத்துப் பாதுகாப்புத் தரங்களும் பின்பற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.




ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் மரியாதையான மற்றும் ஆதரவான நடத்தை, சிறுவர் பாதுகாப்பு மற்றும் கேலிவதைத் தடுப்புக் கொள்கைகளின் பயனுள்ள செயலாக்கம், மற்றும் குறிப்பாக சமூக-பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய பிரிவினர் (எஸ்.இ.டி.ஜி.) மற்றும் பிற நலிவடைந்த பின்னணிகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு ஆலோசனை மற்றும் சமூக-உளவியல் ஆதரவு கிடைப்பதை உறுதிசெய்வதன் மூலம் மாணவர்களின் மன மற்றும் உணர்வுபூர்வமான நல்வாழ்வை எஸ்.எம்.சி. மேம்படுத்த வேண்டும். பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலுக்கான ஒவ்வொரு குழந்தையின் உரிமையையும் பாதுகாக்க, சமூகத்திற்கும் பள்ளிக்கும் இடையே ஒரு பாலமாக இக்குழு செயல்பட வேண்டும். இயற்கை பேரிடர்கள், பாதகமான வானிலை நிலைகள், கலவரம் அல்லது பிற அவசரகாலச் சூழ்நிலைகள் காரணமாகப் பள்ளிகள் மூடப்படும்போது, கல்வி அமைச்சகத்தின் 'பள்ளிகள் மூடப்படும்போதும் அதற்குப் பிறகும் வீட்டில் இருந்தபடியான கற்றலில் பெற்றோர் பங்கேற்பதற்கான வழிகாட்டுதல்களைப்' பின்பற்றி, மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் எஸ்.எம்.சி. ஆதரவளிக்கலாம்.

xiii. **பள்ளி உட்கட்டமைப்புப் பாதுகாப்பு மற்றும் பேரிடர் ஆயத்தநிலை:** பள்ளியின் பாதுகாப்பை மேலும் உறுதிசெய்ய, பள்ளி மேலாண்மைக் குழு உட்கட்டமைப்புப் பாதுகாப்பு மற்றும் பேரிடர் ஆயத்தநிலை ஆகியவற்றை மேற்பார்வையிட வேண்டும். பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் அவற்றின் செயல்பாட்டை உறுதிசெய்யும் வகையில் பள்ளிக் கட்டடங்கள், வகுப்பறைகள், குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள், மின் இணைப்புகள் மற்றும் பிற முக்கிய உட்கட்டமைப்பு வசதிகளை இக்குழு தொடர்ந்து ஆய்வு செய்ய வேண்டும். பள்ளியில் செயல்பாட்டில் உள்ள பேரிடர் மேலாண்மைத் திட்டம் இருப்பதை இக்குழு சரிபார்ப்பதோடு, ஆண்டுக்குக் குறைந்தது இரண்டு முறையாவது பாதுகாப்பு மற்றும் அவசரகால வெளியேற்ற ஒத்திகைகள் நடத்தப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

xiv. **விடுதி மேலாண்மை:** பள்ளிகளுடன் இணைக்கப்பட்டுள்ள அல்லது அதே வளாகத்தில் அமைந்துள்ள கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா (கே.ஜி.பி.வி.) / நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உறைவிட விடுதிகள் (என்.எஸ்.சி.பி. விடுதிகள்) / பிற துறைகளின் விடுதிகள் (பி.எம். ஜன்மன், டி.ஏ.ஜே.ஜி.யு.ஏ. போன்றவை) ஆகியவற்றின் நிலை மற்றும் செயல்பாடுகளைப் பள்ளி மேலாண்மைக் குழு கண்காணிக்க வேண்டும். முறையான பராமரிப்பு, சுகாதாரம், பாதுகாப்பு, குழந்தைகளுக்கு உகந்த வசதிகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட விதிகள் மற்றும் தரநிலைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றை உறுதி செய்வது இதில் அடங்கும்.

xv. **சுற்றுச்சூழல் மற்றும் பசுமை நடைமுறைகளை ஊக்குவித்தல்:** 'ஏக் பேட் மா கே நாம்' திட்டத்தின் கீழ் மரக்கன்றுகளை நடுதல், ஊட்டச்சத்து (சமையலறைத்)

தோட்டத்தை அமைத்துப் பராமரித்தல், கழிவுகளைத் தரம் பிரிக்கும் முறையைச் செயல்படுத்துதல், ஆற்றலைச் சேமித்தல் மற்றும் 'மிஷன் லைஃப்' போன்ற திட்டங்களின் கீழ் பிற சூழல் நட்பு முயற்சிகளைப் பின்பற்றுதல் போன்ற நீடித்த மற்றும் பசுமை நடைமுறைகளைப் பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழு ஊக்குவிக்க வேண்டும்.

தகுந்தவாறு துணைக் குழுக்களுக்குப் பணிகளும் பொறுப்புகளும் பகிர்ந்தளிக்கப்படலாம். எஸ்.எம்.சி.யின் வேறு சில கூடுதல் பொறுப்புகள் **இணைப்பு**-I-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

#### 4. பள்ளி மேம்பாட்டுத் திட்டம் (எஸ்.டி.பி.)

மாணவர்களின் சேர்க்கை மற்றும் வருகை, ஆசிரியர்கள்/பணியாளர்களின் செயல்திறன், வரவுசெலவுத் திட்ட மேலாண்மை, வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பு (அடிப்படை, ஆயத்த, நடுநிலை மற்றும் இடைநிலை நிலைகள்) ஆகியவற்றை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் வகையில், குறுகிய கால மற்றும் நீண்ட கால பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தைப் பள்ளியானது தயாரிக்க வேண்டும்.

i. பள்ளி மேம்பாட்டுத் திட்டம் என்பது உள்கட்டமைப்புத் திட்டத்தையும், கற்றல் செயல்முறைகளில் அதன் பயனுள்ள பயன்பாட்டையும் வழிகாட்டும் கல்வித் திட்டங்களின் தொகுப்பாகும். ஒரு பள்ளியின் கல்வி சார்ந்த தொலைநோக்குப் பார்வையையும், அதனை அடைவதற்கான வழிகளையும் இத்திட்டம் பிரதிபலிக்க வேண்டும். இது பள்ளியின் கல்வி மேம்பாடு, உள்கட்டமைப்புப் பணிகள் மற்றும் அதன் படிப்படியான வளர்ச்சி ஆகியவற்றுக்கான முதன்மைத் திட்டமாகவும் அடிப்படை ஆவணமாகவும் திகழ்கிறது. இத்திட்டமிடல் என்பது ஒரு முறை செய்யப்படும் செயலாக இல்லாமல், ஒரு தொடர் செயல்முறையாகக் கருதப்பட வேண்டும். பள்ளி மேலாண்மைக் குழுக்களால் தயாரிக்கப்படும் பள்ளி மேம்பாட்டுத் திட்டமானது, தடையற்ற உள்கட்டமைப்பு, பள்ளியின் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கான வசதிகள் மற்றும் மாணவர் வருகையை ஊக்குவிப்பதற்கான அடிப்படைத் தேவைகள் போன்ற அனைத்து வசதிகளையும் பள்ளி எவ்வாறு கொண்டுள்ளது என்பதைக் கொண்டிருக்க வேண்டும்.

> எஸ்.டி.பி. என்பது மூன்றாண்டு காலத்திற்குப் பள்ளியின் அனைத்துச் செயல்பாடுகளையும் உள்ளடக்கிய ஓர் உத்திசார் திட்ட ஆவணமாகும். மாணவர்களின் அடைவு நிலையை மேம்படுத்துவதற்குப் பள்ளி மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களை வரையறுக்கும் வழிகாட்டு வரைபடமாக இது திகழ்கிறது; மேலும், இம்மாற்றங்கள் எப்போது, எவ்வாறு செயல்படுத்தப்படும் என்பதையும் இது தெளிவுபடுத்துகிறது.

ii. அடிப்படைக் கற்றல், திறன் அடிப்படையிலான கல்வி மற்றும் கற்போரின் முழுமையான மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தி, கற்றல் விளைவுகளையும் கல்வியின் ஒட்டுமொத்த தரத்தையும் மேம்படுத்துவதற்குக் கல்விச் செயல்பாடுகள் முன்னுரிமை அளிக்க வேண்டும். இந்தச் செயல்பாடுகள் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்; மேலும், இவை நிபுண் பாரத் திட்டம், திறன் கல்வி முயற்சிகள் மற்றும் 10 புத்தகப் பையில்லா நாட்கள் ஆகியவற்றின் நோக்கங்களுடன் சீரமைக்கப்பட்டு, ஒரு விரிவான கற்றல் சூழலை உருவாக்க வேண்டும்.

iii. முந்தைய பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் முடிவுகளை ஆராய்ந்து, தேவைகளை மறுமதிப்பீடு செய்த பின்னர், அத்திட்டம் முடிவடைந்த மூன்று மாதங்களுக்குள் பள்ளி மேலாண்மைக் குழு புதிய திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். **பள்ளி**

**மேம்பாட்டுத் திட்டம் என்பது மூன்று ஆண்டுத் துணைத் திட்டங்களைக் கொண்ட ஒரு மூன்றாண்டுத் திட்டமாக இருக்க வேண்டும்.** பள்ளி மேம்பாட்டுத் திட்டம் பின்வரும் விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும் –

(a) ஒவ்வோர் ஆண்டிற்குமான வகுப்பு வாரியான சேர்க்கை மதிப்பீடுகள்;

(b) பள்ளிக் கல்வியின் அனைத்து நிலைகளுக்கும் தனித்தனியாக, பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட தலைமை ஆசிரியர்கள், பாட ஆசிரியர்கள் மற்றும் பகுதிநேர ஆசிரியர்கள் உள்ளிட்ட கூடுதல் ஆசிரியர்களின் எண்ணிக்கைக்கான மூன்றாண்டு காலத் தேவை.


(c) பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் தரநிலைகளின்படி கணக்கிடப்பட்ட, கூடுதல் உள்கட்டமைப்பு மற்றும் உபகரணங்களுக்கான மூன்றாண்டு காலப் பருப்பொருள் தேவை.

(d) சிறப்புப் பயிற்சி வசதிகளை வழங்குவதற்கான கூடுதல் தேவைகள், இலவசப் பாடநூல்கள் மற்றும் சீருடைகள் போன்ற மாணவர்களுக்கான சலுகைகள், மற்றும் பள்ளியின் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கான பிற கூடுதல் நிதித் தேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய, மேற்கண்ட (b) மற்றும் (c) தொடர்பான மூன்றாண்டு காலத்திற்கான ஆண்டுவாரியான கூடுதல் நிதித் தேவை.

iv பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தில் தலைவர்/துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர் செயலர் கையொப்பமிட்டு, சம்பந்தப்பட்ட நிதியாண்டு முடிவதற்குள் உள்ளாட்சி அமைப்பிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

v. **அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசப் பள்ளிகள்/பள்ளித் தொகுதிகளின் மேம்பாட்டுத் திட்டங்கள் பொதுவெளியில் வைக்கப்பட வேண்டும்.பள்ளியின் செயல்பாடுகளைக் கண்காணிக்கவும்,திட்டங்களைச் செயல்படுத்தவும் பள்ளி மேலாண்மைக் குழு இத்திட்டத்தைப் பயன்படுத்தும்.மேம்பாட்டுத் திட்டத்திற்கான விரிவான வழிகாட்டுதல் கோட்பாடுகள்** **இணைப்பு-II இல்** இணைக்கப்பட்டுள்ளன..

vi. ஒவ்வொரு ஆண்டிற்கான துணைத் திட்டங்களையும் ஆண்டுதோறும் மார்ச் இறுதிக்குள் மதிப்பாய்வு செய்ய வேண்டும்.




**பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தை உருவாக்குவதற்கான படிநிலைகள்**

### 5. கூட்டங்கள் மற்றும் நடைமுறைகள்

எஸ்.எம்.சி.யின் திறமையான செயல்பாட்டிற்கு முறையான கூட்டங்கள் அவசியம். மாதம் ஒருமுறையாவது கூட்டம் நடக்க வேண்டும். கூட்டத்தில் குறைந்தபட்சம் **50% குழு உறுப்பினர்கள்** பங்கேற்றால் மட்டுமே அக்கூட்டத்தில் எடுக்கின்ற முடிவுகள் செல்லுபடியாகும் என்பது விதிமுறையாகும்.

மாநில, மாவட்ட, வட்டார அதிகாரிகளின் வழிகாட்டுதல்கள் அல்லது மாநில, யூனியன் பிரதேச அரசுகளின் ஆணைகளின்படி ஒவ்வொரு பள்ளியும் கூட்டங்களை நடத்த வேண்டும். அனைத்து உறுப்பினர்களுக்கும் உரிய நேரத்தில் தகவல் அளித்து, முழுமையான பங்கேற்பை உறுதி செய்ய வேண்டும். இக்கூட்டங்கள் பள்ளி முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யவும் சவால்களைத் தீர்ப்பதற்குமான திறந்தவெளிக் களமாக அமைய வேண்டும்.

**வெளிப்படைத்தன்மைக்காக, கூட்டக் குறிப்புகள் துல்லியமாகப் பதிவு செய்யப்பட்டு, குழு உறுப்பினர்களின் ஒப்புதலுடன் பள்ளி அறிவிப்புப் பலகையிலோ அல்லது மின்னணு முறையிலோ (இருப்பின்) பொதுப்பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.**

கருத்துகள், பெற்றோர் பங்கேற்பு, பள்ளி மேம்பாட்டுக் கூட்டுச் செயல்பாட்டை அதிகரிக்க, பெற்றோர்-ஆசிரியர் கழகங்களைப் பள்ளி மேலாண்மைக் குழுவுடன் ஒருங்கிணைக்கலாம். பள்ளிச் செயல்பாடு, கற்பித்தல் பொருட்களின் தரம், குழந்தை பாதுகாப்பு குறித்த சமூகத்தின் கருத்துகளைப் பெற அனைத்துப் பள்ளிகளிலும் கருத்துப் பெட்டிகள் அல்லது பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும். பள்ளி மேலாண்மைக் குழு இவற்றை காலாண்டுக்கு ஒருமுறை ஆய்வு செய்து, முக்கிய அம்சங்களைக் கூட்டக் குறிப்புகளில் சேர்க்க வேண்டும்.

## 6. திறன் வளர்ப்பு மற்றும் பயிற்சி

i. மாணவர் சேர்க்கை, வருகைப்பதிவு மற்றும் கல்விச் செயல்பாடு ஆகிய கூறுகளில் மாணவர்களுக்கான ஆதரவை மேம்படுத்துவதற்கும்; நிர்வாகம், கண்காணிப்பு, மேற்பார்வை மற்றும் உள்ளூர் பங்குதாரர்களின் முன்னெடுப்புகளைச் செம்மைப்படுத்துவதற்கும், பள்ளி மேலாண்மைக் குழுவின் திறனை முறையாக மேம்படுத்த வேண்டும். பள்ளி மேலாண்மைக் குழுக்களின் சிறப்பான செயல்பாடானது, அக்குழு உறுப்பினர்களின் அறிவு, ஊக்கம் மற்றும் திறன்களையே பெரிதும் சார்ந்துள்ளது. எனவே, தொடர்ச்சியான திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளும், வழிகாட்டுதல் நிகழ்ச்சிகளும் இன்றியமையாதவையாகும்.

ii. அனைத்து எஸ்.எம்.சி. உறுப்பினர்களுக்கான ஆண்டுப் பயிற்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சிகள், அக்குழு உருவாக்கப்பட்ட அல்லது மறுசீரமைக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் நடத்தப்பட வேண்டும். அதிகபட்ச பங்கேற்பை உறுதி செய்வதற்காக, இவற்றை உள்ளூர்ப் பகுதிகளிலும் உள்ளூர் மொழியிலும் நடத்துவது விரும்பத்தக்கது. உள்ளூர்த் தேவைகளைப் பொறுத்து, பயிற்சி உள்ளடக்கமானது பல்வேறு தலைப்புகளைக் கொண்டிருக்கலாம், அவற்றுள் பின்வருவன அடங்கும்:

(a) சமத்துவமான மற்றும் தரமான கல்வியை மேம்படுத்துவது தொடர்பான ஏற்பாடுகள்

(b) பள்ளி மேம்பாட்டுத் திட்டங்களை (எஸ்.டி.பி.) தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல்

(c) கல்வி சார்ந்த கண்காணிப்பு மற்றும் பள்ளிச் செயல்திறன் மேம்பாடு

(d) நிதி மேலாண்மை மற்றும் சமூகத் தணிக்கையை

(e) உள்ளடக்கிய கல்வி நடைமுறைகள்

(f) தேசிய கல்விக் கொள்கை (என்.இ.பி), 2020-இல் விவரிக்கப்பட்டுள்ள முக்கிய முன்னுரிமைகள்

(g) டிஜிட்டல் கல்வியறிவு மற்றும் கல்வித் தொழில்நுட்பத்தின் பயன்பாடு

(h) பள்ளிப் பாதுகாப்பு மற்றும் மாணவர்களின் நல்வாழ்வு

iii. குழு உறுப்பினர்களுக்கான பயிற்சியை நேரடியாக நடத்துவதே சிறந்தது. தேவைக்கேற்ப, பின்னர் இதனை நேரடி மற்றும் இணையவழிக் கலப்பு முறையில் நடத்தலாம். உள்ளூர் சூழலை நன்கு அறிந்த உள்ளூர் வல்லுநர்கள் மற்றும் கல்வியாளர்களை இதில் ஈடுபடுத்த வேண்டும். பயிற்சியை வெற்றிகரமாக முடிப்போருக்குச் சான்றிதழ்கள் வழங்க முன்னுரிமை அளிக்கலாம்.

iv. தன்னார்வப் பணிகள், எழுத்தறிவுச் செயல்பாடுகள், கலப்பு கற்றல், புத்தாக்கப் பயிற்சி மற்றும்சக ஆசிரியர்களின் கற்றலுக்குகு நிஸ்தா, தீக்ஷா, உல்லாஸ் போன்ற தேசிய மின்-தளங்களைப் பயன்படுத்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை ஊக்குவிக்கலாம். தற்போதைய கற்றல் தொகுதிகளைத் தேவையான திருத்தங்களுடன் மாநிலங்கள் பயன்படுத்தலாம். ஆண்டுப் பயிற்சி மட்டுமின்றி, பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களிடையே வழிகாட்டுதல் அமர்வுகளை மாநிலங்கள் ஏற்பாடு செய்யலாம்; இதில் அனுபவமிக்கவர்கள் புதிய குழுக்களுடன் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்ளலாம்.

## 7. நிதி மேலாண்மை மற்றும் சமூகத் தணிக்கை

i. வெளிப்படையான மற்றும் பொறுப்புமிக்க நிதி மேலாண்மை என்பது பள்ளி மேலாண்மைக் குழுவின் (எஸ்.எம்.சி.) அடிப்படைப் பொறுப்பாகும். அவர்கள் தங்களின் பணிகளை நிறைவேற்றுவதற்காகப் பெறப்படும் அனைத்து நிதிகளும், தலைவர் மற்றும் உறுப்பினர் செயலர் பெயரில் ஒரு தனி கூட்டுக் கணக்காக, குறிப்பாக பள்ளி மேலாண்மைக் குழு தொடர்பான நிதியை நிர்வகிப்பதற்காகத் தொடங்கப்பட்ட வங்கிக் கணக்கில் பராமரிக்கப்பட வேண்டும். பள்ளிக் கணக்குகளை முறையாகப் பராமரிப்பதற்கும், அது தொடர்பான ஆவணங்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும் பள்ளியின் முதல்வர் அல்லது தலைமையாசிரியர் பொறுப்பாவார்.

ii. **குடியிருப்பு சார்ந்த அனைத்து கட்டுமானப் பணிகளுக்கும் ` 30 லட்சம் வரை பள்ளி மேலாண்மைக் குழு மூலம் செயல்படுத்தப்படலாம். கணக்கு தொடர்பான பதிவேடுகளை முறையாகப் பராமரிப்பதோடு, திட்டமிடல், கொள்முதல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றை வெளிப்படைத்தன்மையுடன் பள்ளி மேலாண்மைக் குழு உறுதி செய்யலாம்.** கொள்முதல் செயல்முறைகளில் பள்ளி மேலாண்மைக் குழு மூலம் சமுதாயத்தின் ஈடுபாடு பங்குதாரர்களிடையே ஒரு உரிமை உணர்வை உருவாக்குவதோடு, கொள்முதலில் வெளிப்படைத்தன்மையையும் அடைகிறது.

iii. **கட்டுமானப் பணிகள் ` 30 லட்சத்திற்கும் அதிகமாக இருந்தால், மத்திய பொதுப்பணித் துறையி(சி.பி.டபுள்யூ.டி.)D) சமீபத்திய வழிகாட்டுதல்களின்படி பொது ஒப்பந்தப்புள்ளி (tender) கோருவதன் மூலம் செயல்படுத்தலாம். மற்றும்/அல்லது மாநில பொதுப்பணித் துறை (பி.டபுள்யூ.டி.) நடைமுறைகளைப் பின்பற்றலாம். வெளிப்படைத்தன்மை, தரம் மற்றும் சரியான நேரத்தில் திட்டத்தை முடிப்பதை உறுதி செய்வதற்காக, ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்தல் மற்றும் திட்ட செயலாக்கத்தின் அனைத்து நிலைகளிலும் பள்ளி மேலாண்மைக் குழு பங்கேற்கலாம்.**

iv. ஒரு பள்ளியில் மேற்கொள்ளப்படும் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்குத் தொழில்நுட்ப விதிகள் பின்பற்றப்படுவதை பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர் சான்றளிக்கலாம். செலவு அளவுருக்கள் குறித்து அறிந்துகொள்ள சமுதாயத்திற்கு உள்ள

உரிமையை முழுமையாக மதிக்க வேண்டும். பள்ளி/குழு அளவில் கொள்முதல் செய்யப்பட வேண்டிய பொருட்களின் மாதிரிப் பட்டியல் **இணைப்பு-III-ல்**உள்ளது.

v. ஒரு தனி ரொக்க ஏடு, வங்கிப் புத்தகப் பதிவு, கொள்முதல் தொடர்பான ஆவணங்கள் பராமரிக்கப்பட வேண்டும். அனைத்து நிதி பரிவர்த்தனைகளும் இந்த ரொக்க ஏட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

vi. மாதாந்திர வங்கி இணக்க அறிக்கை தயார் செய்யப்பட வேண்டும், கையொப்பமிடப்பட்ட அறிக்கைகள் ஒரு பதிவேட்டில் அல்லது ரொக்க ஏட்டின் ஒரு பகுதியாகப் பராமரிக்கப்பட வேண்டும். ரொக்க ஏட்டுடன் முறையாக இணைக்கப்பட்டு எண்கள் இடப்பட்ட ரசீதுகளுக்குத் தனி கோப்புப் பராமரிக்கப்பட வேண்டும்.

vii. இருப்புப் பதிவேடு மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு ஆகியவற்றை பள்ளி மேலாண்மைக் குழு பராமரித்துப் புதுப்பிக்க வேண்டும். இந்தப் பதிவேடு குறித்து ஆண்டுதோறும் நேரடிச் சரிபார்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

viii. பள்ளி நிதியானது எந்த நேரத்திலும் உள்/துறைசார் அலுவலர்களால் தணிக்கைக்கு உட்படுத்தப்படலாம், ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் ஆண்டுக் கணக்குகளைச் சமர்ப்பிக்க வேண்டிய பொறுப்பு பள்ளி மேலாண்மைக் குழுவிற்கு உள்ளது, அது சமர்ப்பிக்கப்படாவிட்டால் மேற்கொண்டு எந்தவொரு மானியங்களும் வழங்கப்படாது.

ix. இந்த ஆவணங்கள் தணிக்கையின்போது வழங்கப்பட வேண்டும். கணக்குகளில் பள்ளி மேலாண்மைக் குழுவின் தலைவர்/துணைத் தலைவர் மற்றும் அமைப்பாளர்/உறுப்பினர் செயலர் ஆகியோர் முறையாகக் கையொப்பமிட்டு, அவற்றை உள்ளாட்சி அமைப்பிடம் சமர்ப்பிக்க வேண்டும் அல்லது அவை தயாரான ஒரு மாதத்திற்குள் பள்ளியின் அறிவிப்புப் பலகையில் வெளியிடப்பட வேண்டும்.

x. பள்ளி உள்கட்டமைப்பு, ஒருங்கிணைந்த பள்ளி மானியங்கள் மற்றும் குழந்தைகளுக்கான இலவசப் பாடநூல்கள், சீருடைகள் மற்றும் உதவித்தொகை போன்ற வளங்களுக்காக ஒதுக்கப்படும் மானியங்கள் ஆகியவை, சமக்ர சிக்ஷா திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு பள்ளி மேலாண்மைக் குழுவுடன் இணைந்து பயன்படுத்தப்பட வேண்டும்.

xi. வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்த, பள்ளி மேலாண்மைக் குழுவானது **வருவாய் மற்றும் செலவினங்களின் டிஜிட்டல் ஆவணங்களை**பராமரிப்பது நல்லது. நிதி ஆவணங்கள், கூட்டக் குறிப்புகள் மற்றும் தணிக்கைச் சுருக்கங்கள் ஆகியவற்றை பள்ளியின் அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தலாம்.

xii. வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேலும் மேம்படுத்த, பள்ளி மேலாண்மைக் குழு ஊக்குவிக்கப்படுகிறது **ஒவ்வொரு கல்வியாண்டிலும் குறைந்தபட்சம் ஒரு முறையாவது சமூகத் தணிக்கைகளை நடத்த வேண்டும்**, கல்வி அமைச்சகத்தின் பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையால் வெளியிடப்பட்ட 'சமக்ர சிக்ஷாவின் சமூகத் தணிக்கைக்கான வழிகாட்டுதல்களைப்' பின்பற்றி கல்வி (https://www.education.gov.in/sites/upload_files/mhrd/ files/Guidelines_for_Social_Audit_of_Samagra_Shiksha_scheme.pdf).

## 8. அமைச்சகங்கள்/துறைகளுடனான ஒருங்கிணைப்பின் மூலம் வளங்களைப் பயன்படுத்துதல்

வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவதை உறுதிசெய்யவும், பணிகள் இரட்டிப்பாவதைத் தவிர்க்கவும், பள்ளி மேலாண்மைக் குழுவானது பிற அரசுத் துறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து பள்ளிச் செயல்பாடுகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்தலாம். இந்த ஒருங்கிணைப்பானது, முழுமையான அரசு அணுகுமுறையின் கீழ் மாணவர்களின் கல்வித்திறன், பள்ளியின் உள்கட்டமைப்பு, சுகாதாரம், ஊட்டச்சத்து, திறன் மற்றும் சமூக முன்னெடுப்புகளை

மேம்படுத்த உதவும். துறைகள் மற்றும் செயல்பாடுகளின் வழிகாட்டுப் பட்டியல் பின்வருமாறு:

**i. சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை**

(a) ஆசிரியர்களை சுகாதாரம் மற்றும் நல்வாழ்வுத் தூதர்களாக ஆதரிப்பதன் மூலம் பள்ளி சுகாதாரத் திட்டத்தை (எஸ்.எச்.பி.) செயல்படுத்துதல்.

(b) மாதவிடாய் சுகாதாரத் திட்டத்தின் மூலம் சுகாதாரத்தை மேம்படுத்துதல் — சுகாதாரப் பொருட்கள் மற்றும் அகற்றும் வசதிகள் கிடைப்பதை உறுதி செய்தல்.

(c) உள்ளூர் சுகாதார அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் ஆண்டுதோறும் சுகாதார, உடற்தகுதி மற்றும் ஊட்டச்சத்து முகாம்களை நடத்துதல்.

(d) 'புகையிலையற்ற கல்வி நிறுவனங்கள்' வழிகாட்டுதல்களைச் செயல்படுத்துதல்.

(e) பாதிக்கப்படக்கூடிய பிரிவினர், குறிப்பாக வளரிளம் பருவத்தை அடையும் பெண் குழந்தைகள் மீது சிறப்புக் கவனம் செலுத்தி, குடற்புழு நீக்கம் மற்றும் நுண் ஊட்டச்சத்து வழங்குதல் உள்ளிட்ட பள்ளி சுகாதாரத் திட்டத்தை மேற்கொள்ளுதல்.

**ii. கிராமப்புற மேம்பாட்டுத் துறை**

பள்ளி உள்கட்டமைப்பிற்கான எந்தவொரு கட்டுமானத் தேவைக்கும் மற்றும் பாலா கூறுகளை வலுப்படுத்துவதற்கும், விக்சித் பாரத் – வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உத்தரவாதத் திட்டம்-ஊரக (வி.பி.-ஜி ராம் ஜி) நிதியைப் பயன்படுத்துவதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

**iii. நகர்ப்புற வளர்ச்சித் துறை**

மாநகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் போன்ற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து (யு.எல்.பி.), புத்துணர்வு மற்றும் நகர்ப்புற மாற்றத்துக்கான அடல் திட்டம் (அம்ருத்[5]) மற்றும் தூய்மை இந்தியா திட்டம் (எஸ்.பி.எம்.[6]) ஆகிய திட்டங்களின் கீழ் எஸ்.எம்.சி. ஆதரவைப் பெற முடியும்.

**iv. குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை**

(a) தூய்மை இந்தியா (எஸ்.பி.எம்) திட்டத்தின்கீழ் கழிப்பறைகள், கை கழுவும் இடங்களைத் தூய்மையாகப் பராமரிக்கவும்.

(b) மாதவிடாய் சுகாதார மேலாண்மையின் (எம்.எச்.எம்.) மூலம் மாதவிடாய் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பான அகற்றும் நடைமுறைகளை ஊக்குவித்தல்.

(c) ஜல் ஜீவன் இயக்கத்தின் (ஜே.ஜே.எம்.) மூலம் பள்ளிகளில் பாதுகாப்பான மற்றும் போதுமான குடிநீர் வசதிகள் கிடைப்பதை உறுதி செய்தல்.

**v. மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை**

(a) குழந்தைகள் பாதுகாப்புச் சேவைகள் மூலம் பாதுகாப்பிடங்கள், பரிந்துரை முறைகளை உருவாக்குதல்.

(b) கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு அவர்களின் உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்ய, மாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு ஆணையத்துடன் (எஸ்.சி.பி.சி.ஆர்.) நெருக்கமாக ஒத்துழைத்தல்.

(c) அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளிகளுடனான ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.

---

[5] அம்ருத் திட்டத்தின் கீழ், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் குடிநீர், கழிவுநீர் அமைப்பு, பசுமைவெளிகள், கழிப்பறைகள், விளையாட்டு மைதானங்கள், மேம்பட்ட போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்புகளை வழங்குகின்றன.

[6] நகர்ப்புறங்களில் சாம்பல் நீர் மற்றும் கழிவுநீரைத் திறம்படக் கையாளுவதுடன், அறிவியல் பூர்வமான திடக்கழிவு மேலாண்மையின் மூலம் “குப்பையில்லா” பள்ளி வளாகங்களை உருவாக்கத் தூய்மை இந்தியா இயக்கம் வழிவகுக்கிறது.

vi. திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவுத் துறை

(a) திறன் மேம்பாட்டுச் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

(b) உள்ளூர் தொழில் தேவைகளுக்கேற்ப மாணவர்களைத் தொழில்வழிகளில் வழிநடத்துங்கள்.

vii. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை

(a) சி.டபிள்யூ.எஸ்.என். மாணவர்களுக்காக தீன்தயாள் மாற்றுத்திறனாளி மறுவாழ்வு திட்டத்தை (டி.டி.ஆர்.எஸ்.) பயன்படுத்துதல்.

(b) தகுதியான இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு (ஓ.பி.சி) மாணவர்களைக் கண்டறிந்து விண்ணப்பிக்க உதவி, பிரதமரின் இளம் சாதனையாளர் உதவித்தொகைத் திட்டத்தை (பி.எம்-யசஸ்வி) ஊக்குவிக்கவும்.

(c) சிறப்புத் தேவையுள்ள குழந்தைகளைப் பொதுக்கல்விக்குத் தயார்படுத்த ஆரம்பக்கால தலையீட்டுத் திட்டங்களுக்கு ஆதரவளித்தல்.

(d) போதையில்லாப் பள்ளியை உறுதி செய்வதற்கு ஆதரவளித்தல்.

viii. இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத் துறை

(a) கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் பள்ளி அளவிலான விளையாட்டுப் போட்டிகளை ஒருங்கிணைக்கவும்.

(b) தேசிய விளையாட்டு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் விளையாட்டு உள்கட்டமைப்புகளை மேம்படுத்துதல்.

(c) தேசிய பள்ளி இசைக்குழுப் போட்டியில்பங்கேற்பதை ஊக்குவித்து, படைப்பாற்றல் மற்றும் குழுப்பணியை வளர்த்தல்.

(d) பள்ளி மாணவர்களுக்காகப் பொது விளையாட்டு வசதிகளைப் பயன்படுத்துதல்.

(e) பல்வேறு விளையாட்டுப் பயிற்சியாளர்கள் மற்றும் நிபுணர்களின் ஆதரவைப் பெறுதல், மற்றும் யோகா பயிற்றுவிப்பாளர்களுக்கு ஏற்பாடு செய்தல்.

ix. சட்டம் மற்றும் நீதித் துறை

(a) போக்சோ சட்டம் உள்ளிட்ட குழந்தைகள் பாதுகாப்புச் சட்டங்களைப் பின்பற்றுவதை உறுதி செய்தல்.

(b) மாணவர், பெற்றோர், பணியாளருக்குச் சட்ட விழிப்புணர்வு அமர்வுகளை நடத்துக.

(c) கேலிவதை வன்கொடுமை, உடல்தண்டனை குறித்த தெளிவான புகார் வழிமுறைகளை அமைத்தல்

x. உள்நாட்டு விவகாரங்கள் துறை

(a) குழந்தை பாதுகாப்புச் சட்டங்களை அமலாக்க உள்ளூர் காவல்துறையுடன் ஒத்துழைத்தல்.

(b) பாதுகாப்புத் தணிக்கை, அவசரகால ஒத்திகைகளை நடத்தவும்.

(c) போக்சோ சட்ட வழக்குகளைக் கையாளப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கவும்.

xi. பஞ்சாயத்து ராஜ் துறை

(a) பள்ளி மேம்பாட்டுத் திட்டங்களுக்குச் சமூகத் தொண்டர்களை ஒருங்கிணைக்கவும்.

(b) கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் பள்ளி-சமூக ஈடுபாட்டை வலுப்படுத்துதல்.

(c) பள்ளி/நிறுவனத்திற்காக பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளிடம் உள்ள வளங்கள் முறையாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.

(d) திதி போஜன் நடத்துதல்.

## 9. எஸ்.எம்.சி.களுக்கு கண்காணிப்பு மற்றும் ஆதரவு

பள்ளி மேலாண்மைக் குழுக்களைக் கண்காணிக்கவும் ஆதரிக்கவும் உரிய கட்டமைப்பு இருக்க வேண்டும். வட்டார, மாவட்டக் கல்வி அலுவலர்கள் எளிய சரிபார்ப்புப் பட்டியல்களைப் பயன்படுத்தி இக்குழுக்களின் செயல்பாடுகளை ஆண்டிற்கு இருமுறை மதிப்பாய்வு செய்ய வேண்டும். தண்டனை நடவடிக்கைகளுக்குப் பதிலாக, திறனை மேம்படுத்த ஊக்கமளிக்கும் மேற்பார்வையும் அருகிலுள்ள பள்ளிகளுக்கிடையேயான சக-கற்றலும் ஊக்குவிக்கப்பட வேண்டும். இதன் செயல்பாடுகளை அளவிட, கூட்டப் பதிவேட்டின் முதல் பக்கத்தில் கூட்டங்களின் எண்ணிக்கை, வருகைச் சதவீதம், முடிவுகள், நிதிப் பயன்பாடு போன்ற எளிய செயல்திறன் குறிகாட்டிகள் அடங்கிய சரிபார்ப்புப் பட்டியல் இடம்பெற வேண்டும்; இவற்றை ஆண்டுதோறும் கண்காணிக்கலாம். நேரடிக் கூட்டங்கள் சாத்தியமில்லாதபோது வாட்ஸ்அப் அல்லது கூகுள் மீட் போன்ற செயலிகள் மூலம் மெய்நிகர் அல்லது கலப்பு முறையில் கூட்டங்களை நடத்தலாம். கருத்துப் பெட்டி மூலம் பெறப்படும் பின்னூட்டங்களை மாதாந்திரக் கூட்டங்களில் விவாதிக்கலாம். தேர்தல் அல்லது செயல்பாடுகளின் போது எழும் சிக்கல்களை வட்டாரக் கல்வி அலுவலர் (பி.இ.ஓ.) அல்லது அதற்கான அதிகாரம் பெற்ற பிற அலுவலர்கள் கையாளலாம்.

## 10. முடிவுரை

பள்ளிகளைத் துடிப்பான கற்றல் சூழல் மண்டலங்களாக மாற்றுவதற்கு **கூட்டு உரிமை அவசியமாகும்**, இதில் **எஸ்.எம்.சி.கள்** சமூகப் பங்களிப்பிற்கான முதன்மை நிறுவனத் தளமாகச் செயல்படுகின்றன. சமூக ஈடுபாடானது அடையாளப்பூர்வமான ஆதரவு என்ற நிலையிலிருந்து, **கட்டமைக்கப்பட்ட, தொடர்ச்சியான மற்றும் அமைப்புரீதியான ஈடுபாட்டிற்கு**எடுத்துச் செல்லப்பட வேண்டும். பெற்றோர்கள், முன்னாள் மாணவர்கள், உள்ளாட்சி அமைப்புகள், குடிமைச் சமூக அமைப்புகள் (சி. எஸ்.ஓ.கள்) பெருநிறுவனங்கள் மற்றும் குடிமக்கள் ஆகியோர் **ஒன்றுக்கொன்று தொடர்புடைய வழிகளின் மூலம்**பங்களித்து, எஸ். எம்.சி-கள் வழியே ஒருங்கிணைந்து, கல்வி வழங்கல், சமத்துவம் மற்றும் பொறுப்புக்கூறலை வலுப்படுத்தலாம்.




பள்ளிகளை வலுப்படுத்த, கல்வியை **அரசின் பொறுப்பாக** மட்டுமே கருதாமல், அதை **சமூகத்தின் கூட்டுப் பணியாக ஏற்க வேண்டும்**. பள்ளிகள் அனைவருக்கும் சொந்தமான **சமூகச் சொத்துகளாகக்** கருதப்பட வேண்டும். எஸ். எம்.சி. மூலமாகப் பெற்றோர், முன்னாள் மாணவர்கள், உள்ளூர் தலைவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் வருங்காலத் தலைமுறையை உருவாக்குவதில் பங்காற்ற முடியும். சமூகங்கள் **பொதுக் கல்வியின் பாதுகாவலர்களாகச்** செயல்படும்போது, சீர்திருத்தங்கள் நிலைத்தன்மை பெறுகின்றன.

நாடு முழுவதும் உள்ள பள்ளிகள் **கோடிக்கணக்கான குழந்தைகளுக்கு**வாய்ப்பு, கண்ணியம், சமத்துவத்தை வழங்கி, **தேசிய வளர்ச்சி மற்றும் சமூக நல்லிணக்கத்தின்**முக்கியத் தூண்களாகத் திகழ்கின்றன. எஸ்.எம்.சி. பங்கேற்பு நிர்வாகம் மூலம் சமூகங்கள் இப்பள்ளிகளை வலுப்படுத்தலாம்.

**“அனைவருக்கும் தரமான கல்வி” என்ற என்.இ.பி. 2020-இன் தொலைநோக்கை** முன்னெடுத்து, சமூகப் பொறுப்புணர்வை வளர்ப்பதன் மூலம், இந்தியப் பள்ளிகளை **உள்ளடக்கிய, ஆற்றல்மிக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் கற்றல் மையங்களாக**மாற்றலாம்.

***

**பிரிவு-3-ல் உள்ள எஸ்.எம்.சி.களின் பணிகள் மற்றும் பொறுப்புகளுடன், எஸ்.எம்.சி பின்வரும் செயல்பாடுகளையும் மேற்கொள்ளலாம் அல்லது கண்காணிக்கலாம்:**

- தூய்மையான, பாதுகாப்பான, அழகியல் சார்ந்த மற்றும் நெறிமுறைகளுடன்கூடிய சூழலை வழங்குதல்
- காலை வழிபாடு போன்ற அன்றாட நடைமுறைகளைப் பின்பற்றுதல்
- பின்தங்கிய மாணவர்களுக்கான குறைதீர் வகுப்புகள், படிப்பதற்கான இடங்கள் போன்ற அமைப்புகள் வழங்கப்படுவதை உறுதி செய்தல்
- கற்பித்தலில் சூழலுக்கு ஏற்ற (குறிப்பிட்ட பகுதி சார்ந்த) புதுமைகளை ஊக்குவித்தல் மற்றும் வசதிகளை ஏற்படுத்துதல்
- கற்றல்-கற்பித்தல் வளங்களை எளிதில் பெறுவதற்கு ஆதரவளித்தல்
- இந்திய மரபுகளை அடிப்படையாகக் கொண்ட கண்காட்சிகள் மற்றும் செயல்பாடுகளை ஊக்குவித்தல்
- தூய்மை, அனைவரையும் உள்ளடக்குதல், மரியாதை, ஒழுக்கம், பரிவு போன்ற நற்பண்புகள் அன்றாடச் செயல்கள் மூலம் பின்பற்றப்படுவதை உறுதி செய்தல்
- பெற்றோர்-ஆசிரியர்-சமூகத்தின் முறையான கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்ய உதவுதல்
- ஆசிரியர்களின் தொழில்சார் கண்ணியத்தைப் பாதுகாத்தல்
- சமூக ஒத்துழைப்பின் மூலம் ஆசிரியர்களுக்கு ஆதரவளித்தல்
- முதல் தலைமுறை மாணவர்களை உள்ளடக்குவதற்கு ஆதரவளித்தல்
- பாலின மற்றும் சமூக சமத்துவத்தை உறுதி செய்தல்
- ஒவ்வொரு குழந்தையின் உணர்வுபூர்வமான பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை உறுதி செய்தல்

***

**பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் விரிவான வழிகாட்டு நெறிமுறைகள்:**

பள்ளியானது அனைவரையும் உள்ளடக்கிய, கற்பித்தல் வளம்மிக்க, பாதுகாப்பான, நீடித்த சூழல் மண்டலமாக உருவகப்படுத்தப்படுகிறது. பசுமைக் கட்டட விதிகள், பண்பாடு மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த நீடித்த நடைமுறைகள் மூலம் வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவது இதன் நோக்கமாகும். பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள்:

- கல்வித் திட்டத்தைப் பின்பற்றி உள்கட்டமைப்புத் திட்டம் அமைய வேண்டும்.
- குழந்தையின் ஒட்டுமொத்த வளர்ச்சியை (உடல், சமூகம், உணர்வு மற்றும் அறிவாற்றல் சார்ந்த) உள்ளடக்கிய குழந்தை மையத் திட்டமிடல்.
- அனைத்துக் குழந்தைகளின் தேவைகளுக்கும், அவர்கள் பள்ளிக்குக் கொண்டுவரும் பன்முகத்தன்மைக்கும் ஏற்பச் செயல்படுதல்.
- பள்ளியின் முழு வளாகத்தையும் (உட்புறம் மற்றும் வெளிப்புறம்) குழந்தைகளுக்கும் ஆசிரியர்களுக்குமான தொடர் கற்றல் களமாக அமைப்பதை, திட்டமிடும்போது அனைத்துத் தரப்பினரும் கருத்தில் கொள்ள வேண்டும்.
- பாலா (BaLA) கருத்துருக்களைப் பயன்படுத்திப் பள்ளியின் முழு வளாகத்தையும் கேளிக்கை மற்றும் கற்றல் செயல்பாடுகளுக்கான வளமாக உருவாக்குதல்.
- அனைத்துக் குழந்தைகளுக்கும் பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பு நிறைந்த சூழல். அனைத்துக் குழந்தைகளுக்கும் தூய்மையான மற்றும் சுகாதாரமான சூழல்.
- பள்ளியை முழுமையான வளமாகப் பயன்படுத்துதல் - அப்பள்ளியின் குழந்தைகள் மற்றும் ஆசிரியர்களுக்கு மட்டுமின்றி, சமுதாயம் மற்றும் அண்டைப்பள்ளிகளுக்கும் பயன்படும் வகையில் அமைத்தல்.
- உள்ளூர்ச் சூழல் மற்றும் மரபுகளை மதித்தல் - அறிவுநுட்பம், சமூகத் தேவைகள், கல்வித் தேவைகள், பண்பாடு, நிலவியல், காலநிலை, தாவரங்கள்-விலங்குகள் போன்றவை.
- உகந்த வளப் பயன்பாடு மற்றும் செலவுக்கேற்ற பயன்.
- சுற்றுச்சூழல் சார்ந்த நீடித்த வடிவமைப்புகளின் சிறந்த நடைமுறைகளை ஒருங்கிணைத்தல் - அவற்றைச் செய்துகாட்டவும் பின்பற்றவும் உதவுதல்.
- பள்ளி வளாகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகப் பயன்படுத்த எளிதான புதிய தொழில்நுட்பங்களைக் கையாளுதல்.
- ஒட்டுமொத்தத் திட்டமிடலானது சேவைப் பகுதியில் உள்ளமக்கள் தொகைக்குகு ஏற்ப அமைய வேண்டும்.
- எதிர்கால விரிவாக்கத்திற்கான வாய்ப்பு.

பள்ளிகளின் திட்டமிடல், வடிவமைப்பு மற்றும் கட்டுமானப் பணிகளின்போது, சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதை உறுதி செய்ய வேண்டும். இவை, (i) கல்வி அமைச்சகத்தின் பள்ளிப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பிற்கான வழிகாட்டுதல்கள் 2021, (ii) தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் (என்.டி.எம்.ஏ.) வெளியிடப்பட்ட தேசியப் பேரிடர் மேலாண்மை வழிகாட்டுதல்கள் - பள்ளிப் பாதுகாப்புக் கொள்கை 2016, மற்றும் (iii) சட்டப்பூர்வ அதிகார அமைப்புகளால் அவ்வப்போது வெளியிடப்படும் மாநில மற்றும் உள்ளாட்சித் துணை விதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும்.

***

**பள்ளி/ குழு அளவில் கொள்முதல் செய்யப்பட வேண்டிய உத்தேசப் பொருட்களின் பட்டியல்:**

- சீருடைகள்
- பள்ளிகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட விடுதிக் கட்டடங்களில் நடைபெறும் அனைத்துக் கட்டுமானப் பணிகள்.
- அறைகலன்கள்.
- கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் பாடநூல்கள்.
- பள்ளிகளுக்கான மானியத்திலிருந்து பள்ளிகளை மேம்படுத்துவதற்காகப் பெறப்படும் பள்ளி உபகரணங்கள் மற்றும் பிற பொருட்கள்.
- பராமரிப்பு மானியத்திலிருந்து பள்ளிக் கட்டடங்களைப் பராமரித்தல்.
- பழுதுபார்ப்பு மானியத்திலிருந்து பள்ளிக் கட்டடங்களைப் பழுதுபார்த்தல்.
- கற்றல் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தேவைப்படும் கூடுதல் கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் பிற பொருட்கள்.
- ஆய்வக உபகரணங்கள்.

***



